
கீதைப் பொன்மொழிகள்



வினோபாஜி

தமிழ்நாடு
காந்தி நினைவு நிதி
மதுரை-20

தொகுப்பு: வீ.செல்வராஜ்

S. CHITHARANJAN
22.4.1983
5-2

கீதைப் பொன்மொழிகள்

தொகுப்பாசிரியர் :
வீ. செல்வராஜ்

தமிழ்நாடு காந்தி நினைவு நிதி
மதுரை-625020.

வெளியீடு எண் : 179

நூலின் பெயர் : கீதைப் பொன் மொழிகள்

தொகுப்பாசிரியர் : வீ. செல்வராஜ்

பொருள் : ஆன்மீகம்

அச்சிட்டோர் : விஜயா பிரிண்டர்ஸ், மதுரை-1

வெளியிட்டோர் } தமிழ்நாடு காந்தி நினைவு நிதி
பதிப்புரிமை } மதுரை-20

முதற்பதிப்பு : பிப்ரவரி 1982

பிரதிகள் : 3000

விலை : ரூ 1.00

Title		Gitai : Ponmozhigal (Stories from Vinobajis' Talks on Gita)
Subject	:	Spiritual
printer	:	Vijaya Printers, Madurai-1
Publication + Copyright	}	Tamil Nadu Gandhi Smarak Nidhi, Madurai-20
I St Edition	;	February, 1982
Copies	:	3000
Price	:	Rs 1.00

இந்திய அரசு மலிவு விலையில் வழங்கிய தாளில் இப்புத்தகம் அச்சாகியுள்ளது.

5-2

முன்னுரை

தவத்திரு விநோபா அடிகள் ஆற்றியுள்ள கீதைப் பேருரைகளின் பொன்விழா இவ்வாண்டில் (1982) நிகழ்கிறது. இத்தருணத்தில் அடிகளின் கீதைக் கருத்துக்களை மக்கள் மன்றத்தில் விரைந்து பரப்ப வேண்டும் என்ற ஆர்வத்தில் விளைந்தது இந்நூல். கீதைப் பேருரைகளில் கண்ட கதைகளின் திரட்டு ஏற்கனவே ஒரு நூலாக வெளிவந்துள்ளது. அதனைத் தொடர்ந்து பொன்மொழிகளின் திரட்டு ஒரு நூலாகிறது.

கீதையின் ஆழ்ந்த கருத்துக்களை அனைவரும் படித்துப் புரிந்து கொள்ளும் வண்ணம் இப்பேருரைகளை அடிகள் எளிய இனிய உரைநடையில் ஆற்றியுள்ளார். அவற்றைப் படிக்குந்தோறும் நம் உள்ளம் மேல் நோக்கி எழுகிறது; சித்த சுத்தி வாய்க்கப் பெறுகிறது; ஆன்மநாட்டம் மேலிடுகிறது. ஒவ்வொரு வீட்டிலும் இடம்பெற வேண்டிய நூல் விநோபாவின் கீதைப் பேருரைகள்.

கீதைப் பேருரைகள் முழுதுமே பொன்மொழிகளே, அமுதகலசத்திலுள்ள ஒவ்வொரு துளியும் சாகாக்கலை அருளும் வல்லமை பெற்றதே, ஆயினும் 200 பொன்மொழிகளை மாத்திரம் இங்கு தொகுத்தளிக்கப் பெற்றுள்ளன. கீதைப் பேருரைகள் முழுவதையும் படிப்பதற்கு இத்தொகுப்பு தூண்டுதலாக அமையக்கூடும் என்ற நம்பிக்கையோடு இத்தொகுப்பினை அன்பர்கள் திருமுன்னர் சமர்ப்பிக்கிறோம்.

மதுரை
20 1–1982

தமிழ் நாடு காந்தி நினைவு நிதி
மதுரை—625 020

உள்ளடக்கம்

முதல் அத்தியாயம்

1

ஆண்டவன் ஒருவனைத் தவிர குற்றங்குறைகளே அற்றவ ரென்று வேறு எவரையும் சொல்லுவதற்கில்லை. அதே வகையில் இவ்வுலகில் குற்றமே உருவானவன் என்று கூறத் தக்கவனும் எவனுமில்லை என்பதை மகாபாரதம் வெகு தெளிவாய்க் கூறுகிறது.

மானிட வாழ்க்கையே ''வெள்ளை, கறுப்பு ஆகிய இருவகை நூல் கொண்டு நெய்த ஆடை'' என்று மகாபாரதம் கூறுகிறது.

2

சுதர்மம் எவ்வளவுதான் விகுணமாய்த் (சிறப்பற்றது போன்று) தோன்றினும் அதிலிருந்தபடியே தான் மனிதன் தன்னை வளர்த்துக் கொள்ள வேண்டும். அதிலிருந்தால் மட்டுமே அவனால் வளர இயலும். இதில் பெருமைபற்றிய பிரச்சினையே இல்லை. வளர்ச்சியின் சூத்திரம் இது. பெரிய தென்று கருதி ஏற்றலும், சிறியதென்று விட்டு விடுதலும் சுதர்மத்தின் விஷயத்தில் தகாது. உண்மையில் அது பெரிதுமல்ல, சிறிதுமல்ல, அது தம் சக்திக்கு ஒத்தது.

3

சூரியனது ஒளி எனக்குப் பிடித்தமானது. அவ் வொளியினால் நான் வளர்ந்து கொண்டே இருக்கிறேன். சூரியன் என் வணக்கத்திற்கு உரியது. ஆனால் நான் பூமியை விட்டு சூரியனிடம் போக விரும்புவேனாயின் பொசுங்கிச் சாம்பலாகி விடுவேன். பூமியில் இருந்தவாறே தான் நான் என்னை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

4

மீன்களிடம் ''நீரைவிட பால் அதிக மதிப்புள்ளது. நீங்கள் பாலில் வந்து இருங்கள்'' என்று ஒருவர் சொல்லு

வாராயின் மீன்கள் ஏற்கா. மீன்கள் நீரில்தான் வாழமுடியும் பாலில் அவை மரித்துப் போகும். இதுபோன்றதே சுதர்மமும்,

5

கீதை தோன்றியது சுதர்மத்திற்குத் தடையாயுள்ள மோகத்தை அகற்றுவதற்காகவே,

6

''அருச்சுனனுக்கோ கிருஷ்ணன் இருந்தான் வழிகாட்ட. நமக்கு கிருஷ்ணன் எங்கே கிடைப்பான்?'' என்று நாம் ஆயாசப்பட வேண்டியதில்லை. நம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் அந்தர்யாமியாய் கிருஷ்ணன் வீற்றிருக்கிறான். நமக்கு வெகு அண்மையில் இருப்பவன் அவனே. ஆகவே நாம் நம் உள்ளத்தின் மாசனைத்தையும் அவன் திரு முன்னிட்டு (அருச்சுனனைப்போல்) அவனிடம்,'' ஆண்டவனே, நான் உன் அடைக்கலம் நீ ஒருவனே எனக்கு ஆசான். எனக்குத் தக்க வழிகாட்டு. நீ காட்டும் வழியிலேயே நான் செல்லுவேன்'' என்று விண்ணப்பித்துக் கொள்ளுவோமாக.

நாம் இவ்வாறு செய்வோமாயின் அந்த பார்த்தசாரதி நம் தேரையும் செலுத்துவான். அருச்சுனனது போன்ற வெள்ளை உள்ளமும், இறைவனிடம் அடைக்கலம் புகும் மனப்பான்மையும் இருக்குமிடத்தில் கலக்கமும் யோகமாகி விடுகிறது.

இரண்டாம் அத்தியாயம்

7

சுதர்மம் நமக்கு இயற்கையிலேயே கிட்டுவதொன்று. சுதர்மத்தைத் தேடிக் கொண்டு நாம் எங்கும் போகவேண்டியதில்லை.

உண்மையில் நாம் பிறக்கும் போதே நம் சுதர்மமும் பிறந்து விடுகிறது என்பது மாத்திரமல்ல, நாம் பிறப்பதற்கு

முன்பே அது நமக்காகக் காத்து நிற்கிறது என்னலாம். ஏனெனில் அது நம் பிறவிக்கே காரணமாயிருப்பது. நாம் பிறவி எடுப்பது அது நிறைவேறும் பொருட்டேயாகும்.

8

சுதர்மத்தை தாயுடனே நான் ஒப்பிடுவேன். நான் என் தாயை இங்கே பிறந்த பிறகு தீர்மானித்துக் கொள்ள வேண்டியிருக்கவில்லை. என் தாய் யார் என்பது எனக்காக முன்னரே தீர்மானிக்கப் பட்டு விட்டது, அவர் எப்படிப் பட்டவராயினும் இப்பொழுது அவரை என்னுல் தவிர்க்க இயலாது சுதர்மத்தின் தன்மையும் இத்தகையதே,

9

சுதர்மம் இயற்கையானது, சுலபமாய் கிடைப்பது என் பதை நம்மிடமிருந்து மறைப்பது மோகம். சுதர்மத்தின் பாதையில் குறுக்கிடும் இந்த மோகத்தின் வெளிஉருவங் களுக்கு ஓர் அளவே இல்லை. இதனை ஆராய்வோமானுல். இழிந்த உடற்பற்று இதற்குக் காரணம் என்பது புலனுகும். என்னுடன் என் உடலுடனும் அதனுடன் தொரடர்புள்ள மனைவி மக்களோடும் என் எல்லை முடிவடைந்து விடுகிறது, இவ்வெல்லைக்கு வெளியில் உள்ள அனைவரும் எனக்கு அந்நியர். உடலறிவின் மோகத்தில் சிக்கிய நாம் சிறிதும் பெரிதுமான குட்டைகளைத் தோண்டத் தொடங்குகிறோம். குடும்பப்பற்று என்ற குட்டை. நாட்டுப்பற்று என்றகுட்டை, பிராமணர்,-பிராமணர் அல்லாதார் குட்டை, இந்து- முஸ்லீம் குட்டை இவ்வாறு எத்தனையோ குட்டைகள். எப்பக்கம் திரும்பினுலும் இக் குட்டைகளே தென்படுகின்றன. இதன் விளைவு இழிந்த விகாரங்கள் என்ற நோய்க் கிருமிகளின் கூட்டம் மலிந்து சுதர்மம் என்ற ஆரோக்கியம் கெட்டுப் போகிறது.

10

''நான் இவ்வுடல் அல்லேன். உடல் வெறும் கூடே. நான் என்றும் இறவாத சிதைவற்ற பரந்த ஆன்மா ஆவேன்''

என்ற தத்துவ ஞானம் மனதில் நன்கு பதிந்து விடுமாயின் சுதர்மம் நமக்குச் சிறிதும் பாரமாகவே தோன்ருது.

11

'சாவு' என்ற சொல்லே நமக்குப் பிடிப்பதில்லே. சாவு என்ற பேச்சே நமக்கு அசுபமாய்த் தோன்றுகிறது.

ஒருவர் இறந்து விட்டால் எவ்வளவு அழுகை! எவ்வளவு கூப்பாடு ! கூலிக்கு ஆள் அமர்த்தி அழச் செய்யும் அளவுக்கு நாம் போய்விட்டோம் !

உரிய சமயத்திற்கு முன் இப்பாண்டம் உடையுமா? ஆயினும் இரண்டு நாள் தாழ்த்தி உடைவது இரண்டு நாள் முந்தியே உனடந்து போனல் என்ன கெட்டுப் போகும் ! நாம் கடின சித்தமுள்ளவர்களாக ஆகிவிட வேண்டும் என்பதல்ல இதன் பொருள். ஆனல் உடற்பற்று அன்பு ஆகாது. உடற் பற்றை அகற்ருத வரை உண்மையான அன்பே தோன்ருது.

12

உடற்பற்று அகன்றவுடன் உடல் சேவைக்குரிய கருவியே என்பது புலனுகும். உடலுக்குரிய மதிப்பும் கிட்டும். உடலைப் பாதுகாப்பதும் சுதர்மம் இயற்றும் பொருட்டே என்பதும் புலனுகும்.

13

நம் ஆன்மா பரந்து பெருகத் துடித்துக் கொண் டிருக்கிறது. அது உலகனைத்தும் அணைய விரும்புகிறது ஆனல் நாம் அதை உடல் என்னும் கூண்டிற்குள் அடைத்து கைதி யாக்கி விடுகிருேம்.

14

வாழ்க்கையின் தத்துவங்களை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு உள்ள கலை அல்லது உத்திக்கே ''யோகம்'' என்று பெயர், ''சாங்கியம்'' என்பது தத்துவம், சாத்திரம். ''யோகம்'' என்பது கலை, உத்தி. சாத்திரம் மட்டுமாயின் அதுவெறும் மனக்கோட்டை. வெறும் கர்மமாயின் அது

வெறும் கூடு. ஆன்மாவின் அழிவின்மையைக் கருத்தில் கொண்டு சுதர்மத்தை அநுஷ்டிக்க உதவும் கலே யோகம் ஆகிறது.

15

ஒரு கர்மத்தைச் செய்பவர்களுக்கு இருவகை மனோபாவனைகள் இருக்கும். ஒன்று தாம் செய்யும் காரியத்தின் பயனைத் தாம் நிச்சயமாயத் துய்ப்போம் என்பது. இதற்கு மாருன மற்ருென்று, பயன் கிட்டா தெனில் நாம் காரியமே செய்யமாட்டோம் என்பது.

கீதை இவ்விரண்டினும் வேருன மூன்ருவது பாவனை ஒன்றைக் கூறுகிறது. ''காரியத்தைக் கட்டாயம் செய்; ஆனல் பயனிடத்தில் உனக்கு உரிமையிருப்பதாய்க் கொள்ளாதே'' என்பது.

16

ரசோகுணம், ''பயனுடன் சேர்ந்தேதான் காரியம் செய்வேன்'' என்கிறது. தமோ குணமோ, ''பயனை விடுவதானல் காரியத்தையும் சேர்த்தே விடுவேன்', என்கிறது இவை இரண்டும் உடன் பிறந்தவை.

இவை இரண்டையும் கடந்து மேலே சென்று சத்தவகுணி ஆகு. அதாவது காரியம் செய், ஆனல் அதன் பயனைத் துறந்து காரியம் செய்.

17

பயனை விரும்பாத மனிதனது முழுத்திறனும் காரியத்திலேயே ஈடுபட்டிருக்கும். ஆற்றுக்கு ஓய்வில்லை, காற்றுக்கு இளைப்பாறுதல் இல்லை. சூரியன் எப்போதும் ஒளிவீசிக்கொண்டிருக்கிருன். அவன் பயன் கருதாது பணிபுரிகிருன்.

இதில் ஒரு சாத்துவிக ஆனந்தம் இருக்கிறது. இவ்வானந்தமே அக்காரியத்தின் உண்மையான பயன்,

பயன் கருதாத மனிதன் காரியத்தில ஆழ்ந்து போவதை சமாதி நிலை போன்றது என்றே சொல்ல வேண்டும்.

பயனைக் கருதாது செய்யும் சுதர்மம் என்ற நேர்த்தியான பழம் உண்டானபின் வேறு பயன் எதற்காக?

18

சாத்திரம் நிர்குணமானது கலையோ சகுணம். ஆனல். சகுணம் உருவம் பெற்ருலன்றி அது கண்ணுக்குப் புலனுவதில்லை. கர்மயோகம் கைவரப் பெற்ற சகுண லட்சணம் பொருந்தியவர் ஸ்திதப் பிரக்ஞர் (நிலைத்த மதியுடையோன்) என்போர்; கர்ம சமாதியில் ஆழ்ந்தவர்; ஜீவன் முக்தன்; பக்தன்; குணுதீதன்; ஞான நிஷ்டன்,

19

சாங்கியபுத்தி (நிர்குணம்) + யோகமுத்தி (சகுணம்) + ஸ்திதப்பிரக்ஞன்(உருவுள்ளது) = முழுவாழ்க்கைச்சித்திரம். இதன் விளைவு பிரம்மநிர்வாணம் அல்லது மோட்சம்.

மூன்ருவது அத்தியாயம்

20

ரூபாய் நோட்டின் எடை எவ்வளவு இருக்கும்? அதை அடுப்பில் போட்டுக் கொளுத்திஞல் ஒரு துளி நீரைக்காய்ச்சவும் உதவாது. ஆனல் அதன் மீது ஒரு முத்திரை போட்டிருக்கிறதே; அதனல் அதற்கு மதிப்பு ஏற்பட்டு விடுகிறது. கர்மயோகத்தின் சிறப்பு இதுவே, கர்மத்தின் நோட்டென்று எண்ணிக்கொள்ளுங்கள் பாவனை என்ற முத்திரைக்கு மதிப்பேயன்றி கர்மம் என்ற காகிதத் துண்டுக்கு மதிப்பில்லை.

21

விக்கிரகம் ஒரு கல்துண்டுதான். நான் அதில் என் பாவனையை செலுத்தும் போது அது உயிர் பெறுகிறது பாவனையை அதனின்றும் அகற்றும் போது கல்மட்டுமே எஞ்சி நிற்கும். விக்கிரக வழிபாட்டின் இரகசியம் இதுவே

22

தட்சிணையை நீருற்றி நனைத்துக் கொடுப்பது வழக்கம். தட்சிணை எவ்வளவு கொடுத்தோம் என்ற கேள்வி கிடையாது; அதில் நைப்பு இருக்கிறதா என்பதே முக்கியம்.

23

குருதட்சிணையாக எதைக் கொடுப்பது ? மனு, "இலையோ, பூவோ, விசிறியோ. மிதியடியோ, நீர்ச்செம்போ கொடு" என்கிறார். இது வேடிக்கையாகச் சொன்னது என்று எண்ண வேண்டாம் கொடுப்பது சிறிதாயுனும் அதிலுள்ள சிரத்தை, பக்திபாவனை பிரமாண்டமானது

24

கர்மயோகியின் காரியம் அவனை இப்படைப்பு முழுவதோடும் இணைத்துவிடுகிறது துளசிச் செடிக்குத் தண்ணீர ஊற்றாது உணவு கொள்ளாமை தாவர கிருஷ்டியுடன் நமக்கு அன்புப்பிணைப்பை உண்டாக்குகிறது

25

மகாபாரதயுத்தத்தில் பொழுது சாய்ந்ததும் எல்லோரும் மாலை வழிபாடு செய்யப் போய்விட, கிருஷ்ணபகவான் இரதத்தின் குதிரைகளை அவிழ்த்துவிட்டு, அவைகளுக்குத் தண்ணீர் காட்டி, கொள்வைத்துவிட்டு, உடலைத் தேய்த்து, உடலிலுள்ள உண்ணிகளை அகற்றுகிறார். அந்தப் பார்த்த சாரதியின் உருவை உங்கள் கண்முன் நிறுத்திக் கர்ம யோகத்தினால் விளையும் இன்பத்தைக் கற்பனையினால் அனுபவியுங்கள்.

26

தோள்மீது கதர் மூட்டையைச் சுமந்து கொண்டு தெருத் தெருவாய்ச் சுற்றுகிறவனுக்கு அலுப்புத் தோன்றுமா ? தோன்றாது. ஏனெனில், "நாட்டில் கோடிக்கான என் சகோதர சகோதரிகள் உணவின்றி வாடுகிறார்களே, அவர் களுக்குக் கால்வயிற்றுக் கஞ்சியாவது ஊற்ற வேண்டுமே?" என்ற பாவனை இருப்பதால் கதர் விற்பதன் மூலம் தன்னைத்

தரித்திர நாராயணர் அனைவருடனும் தம்மை இணைத்துக் கொள்ளுவதால் களைப்புத் தோன்றுவதில்லை.

27

காரியம் சித்த சுத்திக்கு ஒரு சாதனம் கர்மயோகி புரியும் மந்திரம் ஏறிய காரியத்தினாலேயே சித்த சுத்தி ஏற்படும். செய்யும் தொழிலினால் மனம் மாறுபடவே செய்யும் தராசின் கோலினால் துலாதரன் என்ற வைசியனுக்குச் சமநோக்கு கிட்டிற்று. பிறரது தலை அழுக்கை நீக்கிக் கொண்டேயிருந்த சேனா என்ற நாவிதனுக்கு ஞானம் கிட்டியது. வயலில் களை அகற்றிக் கொண்டே இருக்கும் கர்மயோகியான உழவனுக்குத் தன் உள்ளத்தின் வாசனைகள், விகாரங்கள் என்ற களைகளை அகற்றும் அறிவு உண்டாயிற்று, பச்சை மண்ணைப் பிசைந்து பிசைந்து சமூகத்திற்குக் கெட்டியான சட்டிபானை செய்து தந்த கோரா என்ற குயவன் தன் வாழ்க்கைச் சட்டியையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற படிப்பினையைப் பெற்றான்.

2௮

“ஆழ உழு, ஆனால் ஈரமாய் விதை என்ற பழமொழி உண்டு. ஆழமாய் உழுதால் மட்டும் போதாது. கீழே நைப்பும் இருக்க வேண்டும். ஆழமும் ஈரமும் இருந்தால் தானியம் நன்றாய் விளையும். ஆகையால் காரியம் சிறந்ததாய் இருப்ப தோடு கடவுள் பக்தி என்ற நைப்பும் இருத்தல் வேண்டும்.

29

கர்மயோகிகளின் தலைவனும் கிருஷ்ணபகவான் குதிரை களுக்குத் தீனி வைக்கிறார்; ராஜசூய யாகத்தில் எச்சில் இலைகளை அள்ளுகிறார்; காட்டில் மாடு மேய்க்கப்போகிறார்; தேர் ஓட்டுகிறார், ஒருவர் தையற்காரராகவும், ஒருவர் வேளாளராகவும், ஒருவர் கைக்கோளராகவும், ஒருவர் நெல் குத்துபவராகவும், ஒருவர் வியாபாரியாகவும், ஒருவர் குயவ வராகவும், ஒருவர் நாவிதராகவும், ஒருவர் சக்கிலியராகவும் காரியம் செய்து கொண்டே முக்தி பெற்றிருக்கிறார்கள்

9

நான்காம் அத்தியாயம்

30

இம்சை என்பது மனம்பற்றிய பண்பு, வெளிப்பார்வைக்கு இம்சை புரியாதிருப்பதினுலேயே மனமும் அஹிம்சைமயமாய் இருக்கும் என்பதில்லை, வாளைத் துறந்து விடுவதால் மட்டும் மனிதன் அஹிம்சை மயமாக ஆகிவிடுகிருன் என்பதில்லை.

31

நாம் வெப்பார்வைக்கு ஒருவரை வணங்குகிரேம். ஆனல் புறத்தே தலைவணங்கி, அங்கே மனமும் வணங்காத போது அப்புறச் செயல் பயனற்றதாகி விடுகிறது, அகமும் புறமும் ஒன்ருக வேண்டும்.

32

வெளியே சிவலிங்கத்தின் மீது நீரை ஊற்றி அபிஷேகம் செய்யும் போது, அந்நீர் ஒழுக்குடன் மனத்தின் பாவனை ஒழுக்கும் இடையருது வீழ்ந்து கொண்டிராவிடில் அவ்வபிஷே கத்திற்கு மதிப்பேது? அந்நிலையில் சிவலிங்கம் ஒரு கல்லாய் நிற்க, நான் இன்னெரு கல்லாகவே இருப்பேன்.

33

பொதுஜன சேவையில் மனத்தூய்மை இல்லாதிருக்கு மாயின் அந்த சேவை பயங்கரமானதாகிவிடும். இதன் பயனுக அங்காரம், துவேஷம், பொருமை, சுயநலம் என்ற விகாரங்கள் பொதுஜன சேவையில் தோன்றுகின்றன என்பதை நாம் நிதரிசனமாகப் பார்க்கிரேம்.

34

கர்மத்துடன் மனம் இணைந்து நிற்க வேண்டும். இம்மன இணக்கத்தையே கீதை ''விகர்மம்'' என்கிறது.

கர்மம் விகர்மமாகும்போது பயன்கருதாமை சிறிது சிறிதாக நம்முன் வரத்தொடங்கும்.

35

பக்தியோகத்தில் புறத்தே தவமும் அகத்தே ஜெபமும் விதிக்கப்பட்டுள்ளது இதன் பொருட்டே.

36

தந்திரத்துடன் (கர்மத்துடன்) மந்திரமும் (மனமும்) சேரவேண்டும்.

மந்திரமில்லாத தந்திரத்துக்கும் மதிப்பில்லை. தந்திர மில்லாத மந்திரத்துக்கும் மதிப்பில்லை. கையினுலும் சேவை நடைபெறவேண்டும்; இதயத்தினுலும் சேவை நடைபெற வேண்டும்.

37

மனத்தின் கூட்டுறவு இல்லாவிட்டால் அகங்காரம் தலை எடுக்கும். என்னைப் புகழ வேண்டும், எனக
கு மதிப்பளிக் வேண்டும் என்பன போன்ற ஆவல்கள் மனத்தில் எழும்; முணுமுணுப்பு, சிடுசிடுப்பு, சலிப்பு, மற்றும் அலுப்பு உண்டாகும்.

38

எண்ணெய் திரியுடன் சேரும்போது சுடர்விட்டு ஒளிவீசும், கர்மத்துடன் விகர்மம் சேரும்போது பயன்கருதாமை விளையும். கர்மத்தில் விகர்மத்தைச் சேர்ப்பதனுல் கர்மம் தெய்வீக ஒளிபெறுகிறது.

39

கர்மத்தில் விகர்மம் சேர்வதால் அதுவே அகர்மமாகவும் ஆகிவிடுகிறது, இதன் பொருள், 'கர்மம் எதுவுமே செய்வதாய்த் தோன்ருமை; கர்மத்தின் பளுவே தோன்றுவ தில்லை'' என்பதே, நாம் செய்தும் செய்யாதவர் போன்று ஆகிவிடுகிருேம்.

40

கர்மம் அகர்மமாவது எப்படி என்பதை வருணிப்பதற்கு மொழிக்குள்ள சக்தி போதவில்லை. அதை உணர வேண்டுமாயின் மகான்களை அணுக வேண்டும். பகவான் ஆயிரம் படங்களுடைய ஆதிசேஷன் மீது கண்வளர்ந்தவாறு யோகநித்திரையில் அமைதியாயிருக்கிறார். இதே வகையில் ஆயிரமாயிரம் கர்மங்கள் செய்துகொண்டிருந்த போதிலும் தம் உள்ளத் தடாகத்தில் சிறு அலையும் எழ விடுவதில்லை. இந்த விசித்திரம் மகான்களிடம் சென்று பார்த்தாலல்லாது விளங்காது.

41

இக்காலத்தில் புத்தகங்கள் மலிந்து விட்டன. கால் ரூபாய்க்குக் கீதை கிடைக்கும். குருமார்களுக்கும் குறைவில்லை. கல்வி மலிவாய்க்கிடைக்கிறது. சர்வகலாசாலைகள் அறிவைப் பொட்டலங்களாய்க் கட்டி வழங்குகின்றன. ஆனால் ஞானமுத உணவை உண்டு எவருக்கும் திருப்தி ஏற்பட்டதாய்த் தெரியவில்லை. இப்புத்தகக் குவியல்களைப் பார்க்குந்தோறும் மகான்களின் சேவை எவ்வளவு அவசியம் என்பது வரவர அதிகமாகப் புரிகிறது.

42

புத்தகங்களின் கெட்டியான அட்டைகளுக்கு வெளியே ஞானம் வருவதாகக் காணவில்லையே! புத்தகக் குவியலின் பின்னே ஞானராஜன் மறைந்து ஒளிந்து கொண்டிருக்கிறான் போலும்!

43

ஸ்ரீ கிருஷ்ணன், "அர்ச்சுனா, எவ்வளவோ விஷயங்களைக் கேட்டுக் கேட்டு உன் அறிவு குழம்பி விட்டது. அது தெளியும் வரை உனக்கு யோகம் கைகூடாது. கல்வி கேள்விகளை இப்பொழுது நிறுத்திவிட்டு மகான்களை அணுகு அங்கே வாழ்க்கைச் சாத்திரத்தைப் படிக்க இயலும். அவ்

விடத்தின் மௌனபோதம் உன் ஐயத்தை அகற்றும் என்கிறார்.

ஐந்தாம் அத்தியாயம்

44

கர்மத்தின் பரப்பைக் குறைத்துக் கொள்ளுதலே பற்றற்ற நிலை ஆகிவிடாது. மனத்தின் உதவி இல்லாதிருக்கும் வரை எவ்விஷயமும் கைகூடாது. ஆகையால் சாதனை புரியும் போது மனத்தின் கூட்டுறவு மிகவும் தேவை

45

புறக்கர்மங்களின் மூலம் நம் மனத்தின் தன்மையை அறிய முடியும். தண்ணீர் மேற்பரப்பில் பார்ப்பதற்குச் சுத்தமாய்த் தோன்றுகிறது. அதில் ஒரு கல்லைப் போடுங்கள். உடனே அதனடியில் தேங்கியுள்ள சகதி மேலே எழும்பி வருவதைக் காணலாம். நம் மனத்தின் தன்மையும் இத்தகையதே. மனத்தின் அடித்தளத்தில் முழங்காலளவு சகதி சேர்ந்திருக்கிறதே ! ''கோபம் வந்து விட்டது'' என்கிறோமே, அக்கோபம் வெளியிலிருந்தா வந்தது ? அது மனதுள் இருந்ததே, மனதில் இல்லாவிட்டால் வெளியில் வருவதேது ?

46

''வெள்ளைக் கதராடை வேண்டாம். அது அழுக்காகி விடும், சாயம் தோய்த்த கதராடை வேண்டும்'' என்கிறார்கள். சாயக் கதராடை அழுக்காவதில்லையா ? அதன் அழுக்கு கண்ணுக்குத் தெரிவதில்லை, அவ்வளவுதான் வெள்ளைக் கதரில் அழுக்கு நன்றாய்த் தெரிகிறது. அது, ''நான் அழுக்காயிருக்கிறேன், என்னைத் துவைத்துப் போடுங்கள்'' என்கிறது. இவ்வாறு வாய்விட்டுக் கூறும் வெள்ளைக் கதர் மக்களுக்குப் பிடிப்பதில்லை. இவ்வாறே நமது கர்மமும்.

47

கர்மம் நமது சொருபத்தை நமக்குக் காட்டும் கண்ணுடி போன்றது. ஆகையினுல் நாம் கர்மத்திடம் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும். கண்ணுடியில் நம் அழுக்குப் படித்திருந்தால் அதைக் காட்டும் கண்ணுடியை உடைப்போமா ? மாட்டோம். அதற்கு மாருக அதனிடம் நன்றியுள்ளவர்களாகவே இருப்போம். முகத்தைத் துடைத்துக் கொண்டு மீண்டும் பார்ப்போம். இவ்வாறே கர்மம் காரணமாக நம் மனத்திலுள்ள குற்றங் குறைகள் வெளியே வருமானுல் அதற்காக நாம் கர்மம் செய்வதிலிருந்து தப்பலாமா? கூடாது. கர்மத்தைச் செய்து கொண்டே தூய்மை பெறுவதற்கு நாம் மீண்டும் மீண்டும் முயல வேண்டும்.

மனத்தின் தன்மையைப் புரிந்து கொள்ளுவதற்கு கர்மம் நமக்குப் பேருதவி செய்கிறது என்பது இதன் கருத்து,

48

ஆரம்பத்தில் நீந்தக் கற்கும்போது எவ்வளவு கஷ்டம் ஏற்படுகிறது? முதலில் மூச்சு வாங்குகிறது நாளாவட்டத்தில் நீச்சு நமக்கு சகஜமாகி விடுகிறது. களேப்பு மனத்தின் தன்மை, கர்மம் சகஜமாகி விடும் போது கர்மம் ஆனந்தமாகி விடுகிறது. அதுவே பின்னர் அகர்மமாகிறது. இவ்வாறு பயின்று கொண்டே வந்தால் கர்மத்தில் அலுப்போ கஷ்டமோ தோன்ருத நிலையை மனம் எய்திவிடும். மனம் நிர்மலமாயும் சாந்தமாயும் இருந்து வரும்.

49

நீங்கள் வானத்தை நோக்கி, ''வானமே நீ வெய்யிலில் வாடுவதில்லையா ? மழையில் நனைவதில்லையா ? குளிரால் விறைப்பதில்லையா ? என்று கேட்டால் அது என்ன பதில் அளிக்கும் ? ''எனக்கு அது ஒன்றும் தெரிவதில்லையே ?'' என்று அது பதில் சொல்லும்.

கர்மத்தை விகர்மத்தின் உதவியினுல் விகாரமற்ற தாக்கும் பழக்கம் ஏற்படவும் சுதர்மம் புரிதல் இயல்பானதாகி விடும் என்பது இதன் பொருள்.

50

ஞானவானுக்கு நல்ல காரியங்கள் இயற்கையாகி விடுகின்றன. கூவுதல் கோழிகளின் இயற்கை தருமம். பாணினியின் காலத்திலிருந்து இன்றுவரை கோழி காலையில் கூவுகிறது. இதற்காக அதற்கு எவரேனும் அத்தாட்சிப் பத்திரம் எழுதிக் கொடுத்ததுண்டா? அது கோழியின் இயற்கை தருமம். அவவாறே உண்மை பேசுதல் எல்லா உயிர்களிடத்தும் அன்பு ஆகிய கர்மங்கள் மகான்களுக்கு இயற்கையாகி விடுகின்றன.

இத்தகைய ஞானவானது கர்மத்தை அகர்மநிலையை எய்திவிட்டதாகக் கொள்ள வேண்டும். இதே நிலைக்குச் சந்நியாசம் என்ற புனிதமான பதவி அளிக்கப்பட்டிருக்கிறது. சந்நியாசம் என்பது பெறற்கரிய இவ்வகர்மநிலையே, இதையே கர்மயோகம் என்றும் கூறலாம்.

51

சர்வ கர்ம சந்நியாசம் பெறுவதெப்படி? கர்வம் நம் முன்னும் பின்னும் வலப்புறமும் இடப்புறமும் எங்கும் பரவியுள்ளது நாம் அமருகிறோம். இதுவும் ஒரு கர்மம்தான். 'அமரு' என்பது ஒரு வினைச் சொல். சும்மா இருப்பதே கர்மமாகும்போது கர்ம சந்நியாசம் கைகூடுவது எப்படி? உலகத்திலுள்ள கர்மங்கள் அனைத்தையும் செய்து கொண்டிருந்தபோதிலும் அவை அனைத்தும் உருகி ஓடிவிடும் படியான யுக்தி ஒன்றை அனுசரித்தலே இதற்குவழி.

52

சூரியன் அல்லும் பகலும் கர்மம் புரிந்துகொண்டிருந்த போதிலும் அது ஒன்றுமே செய்வதில்லை என்று சொல்லப் படுகிறது. இதனுலேயே பகவான், 'நான் இந்த யோகத்தை

முதலில் சூரியனுக்குப் போதித்தேன். பிறகு சூரியனிடமிருந்து சிந்தனையாளனான மனு இதைக் கற்றான்' என்கிறார்.

53

சந்நியாசத்தின் இரண்டு தன்மைகள் ஒப்பிடப் பட்டிருக்கின்றன. ஒன்று இருபத்து நான்கு மணிநேரமும் கர்மம் செய்து கொண்டேயிருந்தும் எதையும் செய்யாமை. மற்றது ஒருகணமும் எதையும் செய்யாத போதிலும் எல்லா வற்றையும் செய்தல்,

54

''கர்மயோகி சிறந்தவனா, கர்மசந்நியாசி சிறந்தவனா, எவன் அதிகக் கர்மம் செய்கிறான்?'' என்று சொல்லவே இயலாதிருக்கிறது. எல்லவாற்றையும் செய்து எதையும் செய்யாமலே எல்லாவற்றையும் செய்தல் என்ற இரண்டும் யோகமே. ஒப்பிட்டுப் பேசுவதற்காக ஒன்றை யோகம் என்றும் மற்றதை சந்நியாசம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

55

சந்நியாசியான யாக்ஞவல்கியருக்கு கர்மயோகியான ஜனகர் சீடர். அதே ஜனகருக்கு சந்நியாசியான சுகதேவர் சீடரானார். முதலில் சந்நியாசி பின் கர்மயோகி, அதன் பின்னர் மீண்டும் சந்நியாசி என்று இம்மாலை தொடுக்கப் படுகிறது. இவ்வாறு யோகமும் சந்நியாசமும் வாரிசுக்கிரமத்தில் ஒன்றன்பின் ஒன்றாய் அமைகின்றன.

56

சந்நியாசமும் யோகமும் ஒன்றே என்பதை உணரு கிறவனையே உண்மை இரகசியத்தை உணர்ந்தவன் எனல் வேண்டும்.

57

இயந்திரம் வேகமாய்ச் சுழலும் போது அது சுற்றாதது போல் தோன்றுகிறது. சந்நியாசியின் நிலை இத்தகையதே மகாவீரர், புத்தர், நிவிருத்தநாதர் ஆகியோர் இத்தகைய

பெரியோரே யோகியே சந்நியாசியும், சந்நியாசியே யோகியும் ஆகின்ஞர்.

58

பகவான் சந்நியாசத்தைவிடக் கர்மயோகம் சிறந்த தென்று சொல்லுகிறுர். சாதகனது கண்கொண்டு பார்க்கு மிடத்து சந்நியாசத்தைவிட கர்மயோகம் சிறந்ததாகிறது. ஏனெனில் சந்நியாசத்தைவிட கர்மயோகம் சுலபமானது. அனுசரித்தல் எளிமையாயிருத்தலே சந்நியாசத்தைவிட கர்மயோகத்தில் உள்ள சிறப்பாகும். ஆனுல் பூரணநிலேயில் இரண்டும் ஒன்றே.

59

ஒரு தங்க நாணயமும் நூறு ரூபாய் நோட்டும் அரசாங்கம் நிலேத்திருக்கும் வரை ஒரே மதிப்புள்ளதே அரசாங்கம் மாறிவிட்டாலோ நடைமுறையில் அந்நோட்டு ஒரு சல்லிக் காசு பெருது. தங்கநாணயத்திற்கோ ஏதேனும் மாற்ருகக் கிடைக்கும்.

இதுபோல் கர்மயோகம் சந்நியாசம் இரண்டிலும் உள்ள ஞானம் சமம், ஆனுல் ஞானத்தை இரண்டிலிருந்தும் அகற்றி விடுகையில் கர்மத்தியாகத்தைவிட கர்மயோகமே சிறந்த தாகிறது. ஞானம் + கர்மம் = ஞானம் + கர்மமின்மை. ஞானத்தை இருவிடங்களிலிருந்தும் அகற்றி விட்டோமானுல் கர்மமின்மையைவிடக் கர்மமே சாதகனுக்குச் சிறந்தது.

ஆரும் அத்தியாயம்

60

உலக நடவடிக்கையிலும் சரி, பரமார்த்திகத்திலும் சரி சித்தத்தின் ஒருமுனேப்பாங்கு இல்லேயேல் வெற்றி கிட்டுதல் அரிது.

இதிலும் மனம் பற்றிய அம்சம் முக்கியம் நீங்கள் ஆசனம் அமைத்து நிமிர்ந்தமர்ந்து கண்களே ஒரே இடத்தில் நிறுத்திக்

கொள்ளுங்கள் இதனாலேயே மனம் ஏகாக் கிரகமாகி விடாது, முக்கிய விஷயம் மனச் சக்கரத்தை நிறுத்தும் வித்தையே, அது வர வேண்டும்.

61

ஒரு சமயம் ஒருவர், ''கண்கள் பாதிமுடியும் பாதி திறந்தும் இருக்க வேண்டும் என்று சொல்லப் பட்டிருப்பது ஏன்?'' என்று கேட்டார். நான் சுலபமான பதிலைச் சொல்லு கிறேன் ''கண்களை முழுதும் மூடிக்கொண்டால் உறக்கம் வந்து விடுகிறது, முழுவதும் திறந்தாலோ பார்வை நாலாபக்கமும் செல்லுகிறது. உறக்கம் வருதல் தமோகுணம். பார்வை எல்லாவிடங்களும் செல்லுதல் இரசோ குணம் ஆகையால் இரண்டிற்கும் இடையிலுள்ள நிலை கூறப்பட்டிருக்கிறது'' என்றேன். அதாவது மனத்தின் நிலை மாருதவரை ஏகாக்ரதை ஏற்படாது.

62

என் சித்தம் எப்பொழுதும் வெளியே போய்க் கொண்டே இருக்கிறது, பிறர் குற்றங்களைக் கண்டு பிடிப்பதையே வேலையாய்க் கொண்டதனால் அது மிகவும் கெட்டுவிட்டது பிறர் குற்றங்களை நான் பார்க்க வேண்டிய அவசியம் என்ன? என்னிட முள்ள குற்றங்கள் என்ன குறைவா? நான் எப் போதும் பிறர் குறைகளைப் பார்ப்பதில் முனைந்தால் என் சித்தம் எப்படி ஏகாக்ரமாகும்?

63

சித்தம் ஏகாக்ரமாவதற்கு சமநோக்கு தேவை, சிருஷ்டி அனைத்தும் மங்கள மயமான மயமானதாய்த் தோன்ற வேண்டும் எனக்கு என்மீது நம்பிக்கை இருப்பது போலவே சிருஷ்டி முழுவதின் மீது நம்பிக்கை இருக்கவேண்டும். இங்கே அஞ்சுவதற்கு என்ன இருக்கிறது? எல்லாம் தூயவை, புனித மானவை, உலகம்மங்களகரமானது, ஏதாவது கேடு இருக்கு மாயின் அது என் பார்வையில்தான் இருக்கும். என் பார்வை எப்படியோ அப்படியேதான் சிருஷ்டியும் சிருஷ்டி மங்கள

மானது என்றுநம் மனதுக்கு உறுதி ஏற்படாத வரை நம் சித்தம் ஏகாக்ரமாகாது சமநோக்கு பெறுவதே அதற்குரிய சிறந்தவழி.

தியான யோகத்திற்கு (1) சித்தத்தின் ஏகாக்ரதை, (2) வரம்புள்ள வாழ்க்கை (3) சம நோக்கு இம் மூன்றும் தேவை

ஏழாம் அத்தியாயம்

64

வெகுண்டவனின் கோபம், அன்பனின் அன்பு, துன்புற்றவனின் கூப்பாடு, இன்பமுற்றவனின் மகிழ்ச்சி, சோம்பேறியின் தூக்கப்பற்று, முயற்சியுடையவனது சுறு சுறுப்பு இவையெல்லாம் ஒரே சைதன்ய சக்தியின் விளையாட்டே, ஒன்றுக்கொன்று முரணன இத்தனை பாவங் களுக்கும் மூலமாக ஒரே சைதன்யம் பூரணமாய் நிற்கிறது.

65

ஒரே காகிதம் ஒரே பென்சில் தான் சைத்திரிகனும் ஒருவனே, ஆனல் வெவ்வேறு சித்திரங்கள்; வெவ்வேறு பாவங்கள் இது தான் சைத்திரிகளது திறமை என்பது. அந்த சிருஷ்டி கர்த்தாவின் அற்புதத்திறமையின் இரகசியத்தை அறிந்து கொள்ள வேண்டும். பகவான் ஒரே வாக்கியத்தில், ''மாயையைக் கடக்க விரும்புவோர் என்னிடம் சரண் புகுவாராக'' என்று சொல்லுகிருர்.

66

மாயை என்பது என்ன? கடவுளின் சக்தியை, கைத் திறனை மாயை என்கிரேம். இவற்றை எல்லாம் ஆக்கிய கலைஞனைப் பற்றிக் கொள்ளவேண்டும். அவன் பழக்கம் ஏற்பட்டபின் வேற்றுமையைத் தோற்றுவிக்கும் மோகத் திலிருந்து தப்பவியலும்.

67

சித்த சுத்தி பெறுவதற்கு யக்ஞம், தானம், ஜெபம், தவம், தியானம், தாரணை போன்ற விகர்மங்கள் கூறப்படு

கின்றன. இவற்றை நான் சோப்பு, சிகைக்காய் ஆகிய வற்றுடன் ஒப்பிடுவேன். ஆனல் பக்தியையோ தண்ணீருடன் ஒப்பிடுவேன். சோப்பு சிகைக்காய் நீரில்லாதபோது பயன்தரா. இதற்கு மாருக இவை இல்லேயாயினும் தண்ணீர் மட்டும் இருந்தால் நிக்சயம் சுத்தம் செய்யலாம். ஆகவே யக்ஞம், தானம், தியானம், தவம் ஆகியவை எல்லா வற்றிலும் உள்ளம் கலவாவிடில் சித்தசுத்தி எப்படி ஏற்படும்? உள்ளக் கலவைக்கே பக்தி என்பது பொருள்.

68

சிருஷ்யின் பொருள்கள் அனைத்திலுமுள்ள இன்பத்தைக் கண்டுபிடிப்பதற்குள்ள சிறந்த வழி பக்தியாகும். பக்தி என்னும் அந்த தெய்வீக பாவனை வந்ததும் உலகெங்கும் ஒரே இன்பம் நிரம்பியதாய்த் தெரியவரும். பகவான் பக்தி என்ற சாதனத்தைக் காட்டியிருக்கிருர். அதன் மூலமாகவே நாம் உண்மை ரசனை பெற்று நுகர இயலும்.

69

மனம் பயனைக் கருதாததாய், நிஷ்காமியமாய் இல்லேயென்ருல், அதனல் என்ன? உலகின் முன் கையை ஏந்தாது கடவுளை வேண்டுவதற்குள்ள பெருமையைக் குறைத்துக் கூறுவதற்கில்லே. காரணம் எதுவாயிருந்த போதிலும் நீ பக்திக் கோயினுள் புகு. ஆரம்பத்தில் ஏதோ பயன் கருதிப் போன போதிலும், பின்னர் பயன் கருதாத நிஷ்காமன் ஆகிவிடுவாய்,

70

பயனைக் கருதிச் செய்யும் பக்திக்கும் விவரம் அறியாத நாட்டுப்புற மக்களின் பக்திக்கும் மதிப்புண்டு. தீயில் எந்த மரத்தை இட்டாலும் அது பற்றி எரியும் பயனை விரும்பிப் புரியப்படும் பக்திக்கும் ஆண்டவன். மதிப்பளிப்பான் பிற் காலத்தில் அந்த பக்தியே பயன் கருதாததாகிப் பூரணத்துவத்தை நோக்கிச் செல்லும்.

71

ஞானவானுன பக்தருக்கு எல்லா விடங்களிலும் ஆண்டவனே காட்சி அளிப்பதால் அவருடை உள்ளங்களில் ஆனந்தம் அலேமோதி எழுகிறது. ஆழ்ந்த கடலில் அவருக்கு ஆண்டவன் பெருமை புலனுகிறது. கோமாதாவிடம் அவனது புத்திர வாஞ்சையும், பூமியினிடம் அவனது பொறுமையும், தூயவானத்தில் அவனது தூய்மையும், சூரிய சந்திர நட்சத்திரங்களில் அவனது ஒளியும் பூவில் அவனது மென்மையும் தீயோரிடம் தன்னேச் சோதிக்கும் ஆண்டவனேயும் அவர் பார்க்கிருர். இவ்வாறு செய்து கொண்டே அந்த ஞானியான பக்தர் ஒருநாள் கடவுளிடம் இரண்டறக் கலந்து விடுகிருர்.

எட்டாம் அத்தியாயம்

72

நம் வாழ்க்கையில் விருப்பு வெறுப்புக்கள், மான அவமானங்கள், இன்ப துன்பங்கள் என்று இவை அனேத்தின் ஸம்ஸகாரங்களும் நம் மனத்தில் ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றன. வாழ்க்கை என்பது ஸம்ஸ்காரங்களின் தொகுதியே,

73

கழிந்தகாலக் கணக்கைப் பார்த்தால் மிகச் சில முக்கிய விஷயங்களே நினேவிலிருக்கும். அவைகளே ஸம்ஸகாரங்கள் இந்த ஸம்ஸ்காரங்களே நம்சொத்து,

74

ஒரு தாய்க்கு அவள் இறக்கும் தறுவாயில் பிள்ளேயின் நினேவு வருமாளுல் அவனுக்குப் பிள்ளேப் பாசம் என்ற ஸம்ஸ்காரமே பலமாய் இருக்கிறதென்று கொள்ள வேண்டும்

75

வாழ்க்கையில் ஏற்பட்ட ஸம்ஸ்காரங்களில் அநேகம் அடிபட்டுப் போய்விட, சக்தி வாய்ந்த ஒரே ஒரு ஸம்ஸ்காரம்

மட்டும் சாரமாய் எஞ்சி நிற்கும். வாழ்க்கை என்ற கேள்விக்கு இதுவே விடையாகும்.

ஆகையால் இறக்கும் தறுவாயில் உறுதியாக இருக்க வேண்டும் என்று விரும்புகிற ஸம்ஸ்காரத்தை அனுசரித்து நம் வாழ்க்கையின் போக்கை அமைக்க வேண்டும்.

76

பிறவி எடுத்ததுமே நாம் சாவுக்குரிய டிக்கட்டு வாங்கிக் கொண்டவராகி விட்டோம். நம் மார்பின் மீது மரணம் நர்த்தனம் செய்து கொண்டிருக்கிறது.

77

மரணம் வரும்பொழுது மனிதன் தன் வாழ்க்கையின் வரவு செலவுக் கணக்கைப் புரட்டி மிச்சமென்ன என்று பார்க்கிறான். இறுதிக் கணக்கை இனிதாக ஆக்குவதற்கு ஆயுள் முழுதும் நாம் பயின்று கொண்டே இருக்கவேண்டும். இன்று முதலே மனத்தின் மிகவும் உயர்ந்த ஸம்ஸ்காரங்கள் பதிவதற்கு என்னவென்று சிந்தித்த வண்ணம் இருக்க வேண்டும். நல்ல விஷயங்களில் சித்தத்தை ஈடுபடுத்த வேண்டும்.

78

எப்பொழுதும் பாவம் செய்து கொண்டிருந்துவிட்டு இறுதி நேரத்தில் ராமநாமம் நினைவிற்கு வரும் என்று எண்ணி ஏமாற வேண்டாம். இன்று முதலே மனதைச் செலுத்தி முயற்சி செய். எப்பொழுதும் நல்ல ஸம்ஸ்காரங்களே நம்மிடம் சேரவேண்டும் என்று எண்ணம் கொண்டிரு. இவ்வாறு எச்சரிக்கையாய் இருந்து வருவாயானால் இறுதிக் காலத்தில் அதிர்ஷ்டச்சீட்டு விழும். வாழ்வுக்கும் சாவுக்கும் நாமே அதிகாரிகள் ஆவோம்.

79

சிவலிங்கத்தின் மீது சிறிது சிறிதாகவே நீரை அபிஷேகம் செய்யவேண்டும். இருபத்தி நான்கு மணிநேரமும் செய்யப் படும் அபிஷேகத்தின் நீரைச் சேர்த்துப் பார்த்தால் இரண்டு

வாளியே இருக்கும். அதை ஒரே தடவையில் சிவலிங்கத்தின் மீது ஊற்றி விட்டால் என்ன? ஒவ்வொரு சொட்டாய் ஊற்றுதலே உபாசனை. இது போல் ஒரே வகையான ஸ்ம்ஸகாரங்கள் இடையருது நீரொழுக்கைப்போல் ஏற்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும்.

80

கல்லின் மீது பதினெட்டு அடி அடித்தும் அது உடைய வில்லை. பத்தொன்பதாவது அடிவிழுந்தும் அது உடைய வில்லை இருபதாவது அடிவிழுந்ததும் அது உடைந்தது என்ருல் முந்திய பத்தொன்பது அடிகளும் வீண் போயின என்றுஎண்ணலாமா? அந்த இருபதாவதுஅடிபயனளித்ததற்கு முன் கொடுத்த பத்தொன்பது அடிகளும் உதவின என்றே சொல்ல வேண்டும். இது போல் ஸம்ஸ்கார ஒழுக்கு இடையருது இருந்து கொண்டே வந்தால் தான் இறுதியில் வெற்றியைக் காண இயலும் இத்தகைய பரம மங்களமான முடிவைப் பெறுவதற்காக அல்லும் பகலும் விழித்திருக்க வேண்டும். நாம் ஜபமும் தத்துவ சிந்தனையும் செய்து கொண்டே இருக்க வேண்டும் இறுதியில் வரும் மரணம் இனிமை தரும்.

ஒன்பதாம் அத்தியாயம்

81

வேதங்களின் சாரம்தான் என்ன? அதுதான் ஆண்டவனின் திருநாமம். ராமநாமத்தால் மோட்சம் கிட்டுவது உறுதியாயிற்று. பெண்கள், குழந்தைகள், சூத்திரர், வைசியர், அறிவிலிகள், எளியோர் பலவீனர் இன்னோரன்ன அனைவருக்குமே இதனுல் மோட்ச சாதனம் சுலபமாகி விட்டது. வேதங்கள் என்ற பெட்டியில் வைத்துப் பூட்டியிருந்த பொக்கிஷத்தை பகவான் பொதுச் சாலையில் கொண்டு வைத்து விட்டார்.

82

ஆண்டவனே சராசரங்களிலும் காட்சியளிக்கிருன். அவனைத்தேட உபாயம் மிகச் சுலபம். நீ செய்யும் காரியங்கள் ஒவ்வொன்றையும் ஆண்டவனிடம் சேர்த்து விடு.

83

இடைப்பிள்ளைகள் இந்திர பூசைக்குக் கிளம்பிய போது கிருஷ்ணன் அவர்களிடம், ''இந்திரனைக் கண்டவர் யார்? இக் கோவர்த்தன மலையோ நம் கண்முன் நிற்கிறது. இதில் நம் பசுக்கள் மேய்கின்றன. ஆகையால் இதற்கே செய்யுங்கள் பூசை' என்ருன். கிருஷ்ண பரமாத்மா தம் அனுபவத்திலிருந்தே இந்தச்சுலப வழியைக் காட்டியிருக்கிருர்

84

காரியம் நிதரிசனமாய் எப்படியெப்படி நடந்துவருகிறதோ அதை அப்படியப்படியே பகவானுக்கு அர்ப்பணம் செய்துவிடு மனத்திலெழும் வாசனைகளையும் ஆசை, வெகுளி முதலான விவகாரங்களையும் கூட ஆண்டவனுக்கு அர்ப்பணமாக்கி விட்டு கவலையற்றிரு. பொறிகளும் சாதனங்களே. அவற்றையும் ஆண்டவனுக்கு அர்ப்பணமாக்கிவிடு. இதுவே ராஜயோகம் என்பது.

85

வாழ்க்கை முழுதும் இதனுல் ஒரு பெரிய யக்ஞமாகி விடுகிறது. என் உறக்கம் ஒரு சமாதியாகி விடுகிறது. ஆண்டவனுக்கு அர்ப்பணம் செய்துவிட்டுத் தூங்குவோமாயின் அத்தூக்கம் சமாதியே அல்லாது வேறு என்ன?

86

இந்த பாவனையுடன், அதாவது இது ஆண்டவனுடையது என்ற உணர்வுடன் ஒரு சாதாரணக் காரியம் செய்த போதிலும் அது புனிதமாகிவிடுசிறது. நம் வீட்டிற்கு வந்-திருக்கிற விருந்தினர் ஆண்டவனே என்று மனதில்

எண்ணிப் பாருங்கள்; நம் பாவனை எந்த அளவிற்கு மாறக்கூடும் என்று நீங்களே உணரலாம்.

87

கவிஞன் இயற்றும் தோத்திரம் ஆண்டவனுக்கே. கைக்கோளன் நெய்யும் ஆடையும் ஆண்டவனுக்கே, உள்ளத்தைத் தொடும் எத்தகைய கற்பனை இது! இப்பாவனை வாழ்க்கையில் வந்துவிடுமானால் அது எவ்வளவு தூய்மை பெறும்! ஒரே கணத்தில் அகமும் புறமும் எல்லாம் மாறிப் போகும்.

88

பாவனையிலேயே எல்லாம் பொதிந்திருக்கிறது. வாழ்க்கையே பாவனை மயம்தான். இப்புனித பாவனையின் பயனாக ஒரு காரியம் ஏற்கனவே இருந்ததற்கும் பின் அது ஆவதற்குமுள்ள வேற்றுமை ஆகாயத்துக்கும் பாதாளத்திற்குமுள்ள அளவு ஆகிவிடும்.

89

போதனா சாத்திரத்தில் இந்த பாவனை மிகவும் தேவை. பிள்ளைகள் யார்? ஆண்டவனது உருவங்களே. நான் இந்த தெய்வங்களுக்குப் பணிவிடை செய்து கொண்டிருக்கிறேன் என்ற பாவனை ஆசிரியருக்கு இருக்க வேண்டும். பிள்ளைகளும் இதே தெய்விக பாவனையுடன் ஆசிரியர்களிடம் நடந்து கொள்ள வேண்டும். இத்தகைய பாவனை இருவருக்கும் இருந்து வருமானால் கல்விசிறந்ததாய் அமையும்! பிள்ளைகளும் பகவான்! ஆசிரியரும் பகவான்!

90

இந்த பாவனை சித்தத்தில் பதிந்துவிடுமாயின் பிறகு நாம் ஒருவரோடொருவர் நடந்து கொள்ள வேண்டிய நெறிமுறை நம் உள்ளத்தில் தானே தோன்றத் தொடங்கும்.

சாத்திரம் படிப்பதற்கு அவசியமே ஏற்படாது. எல்லாக் குறைகளும் விலகிப்போகும். பாவம் ஓட்டம் பிடிக்கும். தீமையின் இருள் அகலும்,

91

இப்பிறவியில் மட்டுமல்ல எண்ணிலடங்காத எத்தனையோ பிறவியில் செய்த பாவங்களையும் இமைப் பொழுதில் பொசுக்கிச் சாம்பலாக்கும் சக்தி ஆண்டவன் நாமத்துக்கு உண்டு. குகையில் எத்தனையோ யுகங்களாய் இருள் மண்டியிருந்தும் ஒரு தீக்குச்சியைக் கொளுத்திப் பிடித்ததும் இருள் ஓடிப்போய் விடுகிறது. ராமநாமத்தின் அருகில் பாவத்தினுல் நிற்கவே இயலாது. கருமங்கள் அனைத்தையும் ஆண்டவனுக்கு நிவேதனமாக்கும் பாவனையால் இழிந்த வாழ்வும் தெய்வீக வாழ்வாகிவிடும். மலின வாழ்வும் அழகு பெற்றிலங்கும்.

92

இந்த இராஜயோகம் கர்மயோகத்தைவிட ஒரு 'அடி முன்னே போகிறது. ''கருமம்செய், பயனைத் துறந்து விடு'' என்று சொல்லுவதுடன் கர்ம யோகம் முடிந்து விடுகிறது. இராஜயோகமோ, கருமத்தின் பயனை விடாதே. அதை ஆண்டவனுக்கு அர்ப்பணித்து விடு, என்கிறது, ஒரு புறம் கர்மம், மறுபுறம் பக்தியும் சேர்த்து வாழ்க்கையை அழகு படுத்துகிறது. கருமயோகத்தில் விடப்பட்ட பயனை இராஜ யோகம் ஆண்டவனுடன் இணைக்கிறது

93

விதைப்பதற்கும் வீசி எறிவதற்கும் வித்தியாசமுண்டு. விதைக்கப்பட்டது பெருகிப் பயனளிக்கும் ஏறியப்பட்டதோ பயனில்லாது போகும். ஆண்டவனிடம் அர்ப்பணம் செய்யப்பட்ட கருமம் வயலில் விதைத்த விதைபோன்றது. அதனுல் வாழ்க்கையில் அளவிலடங்காத ஆனந்தமும் தூய்மையும் ஏற்படும்.

94

ஆண்டவனுக்கு அர்ப்பணமாக்கிவிடும் இந்த இராஜ யோகத்தில் எல்லாச் சாத்திர சாதனங்களும், எல்லாக் கர்ம-விகர்மங்களும் ஆழ்ந்து போயின. எல்லாச் சாதனைகளும் முற்றுப் பெற்று விட்டன. சக்தி வாய்ந்த இந்த சாதனம் ஏதோ மிகவும் எளிதாய்த் தோன்றினும் மிகவும் கடினமானது. இது சுலபமாயிருப்பதற்குக் காரணம், இது ஒன்றுமறியாத சாதாரண எளிய மனிதரிலிருந்து பெரிய பண்டிதர் வரை யாவரும் சிரமமின்றி தத்தம் வீடுகளிலிருந்து கொண்டே செய்யக் கூடியதாயிருப்பதே. இது இவ்வளவு சுலபமாயிருந்தும் இதைச் செய்வதற்கு நமக்குப் பெரிய புண்ணிய பலம் இருக்க வேண்டும்.

பத்தாம் அத்தியயாம்

95

ஆண்டவனுக்கு அர்ப்பணம் செய்தல் என்ற சுலபமான, தெளிவான விஷயம் மிகவும் சிரமமாய்த் தோன்றினால் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால், இதற்கு வழிதான் என்ன? பத்தாம் அத்தியாயத்தில் இந்த வழி கூறப் பட்டிருக்கிறது.

சிறுபிள்ளைக்குப் போதிக்க நாம் கையாளும் உபாயங்களில் ஒன்று, முதலில் சுலபமான எழுத்துக்களைச் சொல்லிக் கொடுத்து, பிறகு சிக்கலான எழுத்துக்களைக் கற்பித்தல் என்பது. இம்முறையில் ஆண்டவனைக் காணப் பயில வேண்டும். முதலில் ஸ்தூலமான ஆண்டவன், கடல், மலை ஆகிய சிருஷ்டிகளில் அவனைத் தரிசிக்கலாம். பிறகு ஒவ்வொரு நீர்த்துளியிலும், மண்ணின் ஒரு சிறு திவலையிலும்! ஸ்தூலத்திலிருப்பதுதான்" சூக்குமத்திலும். இது ஒரு முறை.

96

இரண்டாவது போதனா முறை. முதலில் அருகிலுள்ள ஆண்டவனின் சுலபமான உருவங்கள். நீ உன் தாயிடம் ஆண்டவனைப்பார்! நம்முன் உள்ள ஆண்டவனின் முதல்

உருவம் நம் தாயே. வாத்சல்யத்தின் உருவில் ஆண்டவனே அங்கு நின்று கொண்டிருக்கிறான். ஆண்டவனுக்குச் செய்யும் தலைசிறந்த வழிபாடு ஒன்று உண்டென்றால் அது அன்னையின் வழிபாடே. ஆண்டவனை ''அம்மையே'' என்று அழை.

பிறகு தந்தை, குரு ஆகியோரிடம். ஆண்டவனைக் காண்பாய். அதன் பிறகு கருணைமிக்க பெரியோர்கள்; மகான்கள். இதேவகையில் குழந்தைகளிடமும் ஆண்டவனைக் காணக் கூடுமானால் எவ்வளவு ஆனந்தமாக இருக்கும்!

97

ஏசுநாதரிடம் சீடர்கள், ''பரலோகத்திற்கு யாரால் போக முடியும்? '' என்று கேட்டபோது, ஏசுநாதர் அருகிலிருந்த ஒரு குழந்தையைத் தூக்கிக் காட்டி, ''இக் குழந்தையைப் போன்றவர்ளே அங்கு போக இயலும்'' என்றார். ஏசுநாதர் கூறியது முற்றிலும் உண்மை.

98

குழந்தையிடம், ''பொய் சொல்லாதே'' என்று போதிக்கிறோம். அவன் ''பொய் என்றால் என்ன?'' என்று கேட்கிறான். நாம் அவனிடம், ''உள்ளதை உள்ளபடியே சொல்ல வேண்டும்'' என்ற தத்துவத்தைக் கூறுகிறோம். உள்ளதை உள்ளவாறு கூறுவதைத் தவிர வேறு வகையில் கூறுவதும் உண்டோ என்று அவன் வியப்படைகிறான். குழந்தைகள் யார்? தூய பரம் பொருள்களின் உருவங்களே.

99

அடுத்து சிருஷ்டியிலுள்ள மனோகரமானவற்றில் ஆண்டவனைக் காணப்பயில்வோம். சூரியன் தோன்றுவதற்கு முன்னுள்ள அந்த உஷாக்காலம்! ஆண்டவனது செய்தியைக் கொணரும் தேவ தூதிகை, அதிலே ஆண்டவனைப் பார்.

100

அவ்வாறே அந்தச் சூரியனில் ஆண்டவனைப்பார். காலையில் எழுந்து அந்த ஆண்டவனின் கலைத்திறனைக்

கொஞ்சம் கண்திறந்து பாரேன் ! அங்கே அழகிய ஆண்டவன் நின்று கொண்டிருக்க, இங்கே இவன் முகத்தின் மீது போர்வையை இழுத்து மூடிக்கொண்டு குறட்டை விடுகிருனே!

101

அந்தப் புனித கங்கை ! சிவபெருமானது ஜடா மகுடத்தி லிருந்து வழிந்து வரும் அந்த கங்கை! ராஜிய பாரங்களை எல்லாம் துரும்பென வீசி எறிந்து விட்டு அரசர்கள் அதன் கரைகளில் தவமியற்றிஞர்களே, அந்த கங்கை ! தாம் இறந்தபின் தன் எலும்பாவது கங்கையில் சேரவேண்டும் என்று ஒரு இந்து விரும்புவதன் காரணம் புரிகிறது. அந்த கங்கையை பரம்பொருள் என்றேகொள்

102

இந்தக் காற்று எங்கிருந்து வருகிறதோ, எங்கே போகிறதோ நாம் அறியோம். இது ஆண்டவனின் ஆனல் இக்காற்றின் செய்தியை யார் கேட்கிருர்கள் ? தூதுவனே, ஆண்டவனின் அன்புச் செய்தியை ஒவ்வொரு கணமும் இக்காற்று தாங்கி வருகிறதே, அதைக் கேள்.

123

வேதங்களில் அக்கினி வழிபாடு சொல்லப்பட்டிருக்கிறது அக்கினி நாராயணனுகும். அதில் எவ்வளவு வெப்பம், எவ்வளவு ஒளி ! வேத ஒலி முதன் முதலில் தோன்றியதே. தீயின் வழிபாட்டின் பொருட்டே! அது இடையருது துடித்த வண்ணமிருக்கிறது எப்போதும் மேல்நோக்கி எழத்தவிக் கிறது. இந்த அக்கினி என்பது என்ன? ஆண்டவனே!

104

நம் வீட்டில் தினமும் உதவிவரும் பிராணிகளிடம் ஆண்டவனைப் பார், பசுத்தாய்க்குத் தான் எவ்வளவு அன்பு! கன்றுகளுக்காகப் பால்சுரக்கும் மடியுடன் 'அம்மா' என்று அலறிப் பாய்ந்து வரும் பிள்ளைப் பாசமிக்க பசுவும் ஆண்டவனே,

105

குதிரை எவ்வளவு நேர்த்தியானது, எவ்வளவு உண்மையும் நன்றியும் உள்ளது! கிருஷ்ணபகவான் தாமே குதிரைக்கு உடலைத் தேய்த்துவிடுவார், தினவெடுப்பார், தம் பீதாம்பரத்தில் கொள் எடுத்துப் போய்க் கொடுப்பார். இவ்வழகிய அன்புமிக்க குதிரை ஆண்டவனின் உருவே.

106

சிங்கத்தின் கர்ஜனையில் உள்ள கம்பீரமும் சிறப்பும் உள்ளத்தை ஒரு உலுக்கு உலுக்கிவிடும். அதன் தீரமும் பெருமையும் அஞ்சாமையும் பொருந்திய முகப்பொலிவையும் அரசருக்குரிய அதன் கம்பீரப்போக்கையும் என்னென்பது? சிங்கம் பகவானின் திவ்ய சிருஷ்டியே!

107

புலியிடம் ஆண்டவனின் அம்சம் வெளியாகிறது. பாணினி பகவான் புலியினிடம் ஆண்டவனைத் தரிசித்தார். புலி ஒரு தெய்வீக விபூதி என்பதைக் கண்டார்.

108

பாம்பையும் அவ்வாறே எண்ணுங்கள். பாம்பு ஆசாரத்தில் தீவிர பக்தியுள்ள அந்தணனைப் போன்றது. அதற்கு அசுத்தம் சிறிதும் பிடிக்காது. தனித்து வாழும் ரிஷியைப்போல் அல்லவா அது ஒதுங்கி வாழுகிறது! நம் முன்னோர் நாக பூஜை வழிபாட்டிற்கு வழி செய்திருக்கிறார்கள். கணேசரின் இடையில் பாம்பு கட்டப்பட்டிருக்கிறது. சிவபெருமான் கழுத்தில் பாம்பு சுற்றிக் கொண்டிருக்கிறது. விஷ்ணு பகவானே பாம்புப் பாயில் படுத்துறங்குகிறார். பாம்பின் மூலம் ஆண்டவன் உருவம் வெளியாகிருப்பதே இதன் கருத்தாகும்.

109

இராமனுக்கும் குரங்குகளுக்கும் ஏற்பட்ட அன்பு காரணமாகவே எனக்கு இராமாயணம் பிடிக்கிறது. இராமனது

'இராமத் தன்மை', இனிமை, உண்மையில் அவன் குரங்கு களுடன் நட்புரிமை பூண்டதில் தான் இருக்கிறது இராமனிட மிருந்து வானரங்களை அகற்றி விடுவோமானால் அந்த இராமனிடம் இராமஅம்சம் எவ்வளவு மிச்சமிருக்கும்? பிரமத்தின் கண்கள் எப்படியிருக்கும் என்பதை விளக்கப்புகும் உபநிடதங்கள் குரங்குகளின் கண்களை உவமையாக்கியுள்ளன. குரங்குகளிடம் பரம்பொருளைக் காணக் கற்றுக் கொள்.

110

மேகம் திரளும் போது மயில் அகவுகிறது. நம் சங்கீத சாத்திரம் மயிலின் அகவலின் அடிப்படையில் அமைக்கப் பட்டிருக்கிறது. மயிலின் குரலே ஷட்ஜம சுவரம். அதன் தோகை அழகின்முன் மனிதனது பெருமை எல்லாம் மங்கலாகி விடுகிறது. மாமன்னர்களின் ஒப்பனை எல்லாம் மயில் தோகையின் முன் எம்மாத்திரம்! அதில் பரம்பொருள் இருப்பதைக் காணுங்கள். இந்தப் படைப்பு முழுதும் இதே வகையில் தான் சோடிக்கப்பட்டிருக்கிறது.

111

குயில் கூவி யாரை அழைக்கிறது? கோடையில் மரங்களில் கொழுந்து விடும் தளிர்களுக்கு அழகு அளித்த அந்தக் கொடையாளி எங்கே என்று அது கூவிக்கேட்கிறது போலும்! அது கூவும் போது உபநிடதத்தையே பாடுவது போலல்லவா இருக்கிறது! குயில் உருவில் வெளியாகும் பரம் பொருளைத் தரிசிப்பதற்காக 'கோகில விரதம்' உண்டு

112

குயில் அழகியதென்றால் காகம் விகாரமானதா? காகத்துக்கும் மதிப்பளி. அது சிறகுகளை அடித்துக்கொண்டு வருவது எவ்வளவு நேர்த்தியாக இருக்கிறது! சிறு குழந்தை களின் உள்ளத்தை அது கவர்ந்து விடுகிறது! காக்கையிடம் நேசமுள்ள அக்குழந்தை பைத்தியமா? அவனிடம் ஞானம் நிரம்பியிருக்கிறது காக்கையின் உருவில் தோன்றும் பரம் பொருளுடன் அக்குழந்தை இரண்டறக் கலந்து விடுகிறது.

குழந்தைகளுக்கு படைப்பின் விஷயத்தில் இருந்து வரும் ஆவலே அடிப்படையாகக் கொண்டே ''ஈசாப்பு நீதிக் கதைகள்'' உருவாக்கப்பட்டுள்ளன.

113

முதலில் சுலபமான எழுத்து, பிறகு சிக்கலான எழுத்து கற்கும் வரை படிப்பில் முன்னேற்றம் இல்லே. தீயோரிடம் உள்ள பரம் பொருளேயும் பார்க்கக் கற்க வேண்டும். இராமன் நமக்குப் புரிகிருன். இராவணனும் புரிய வேண்டும். ''அத்திருடர் தலேவருக்கு நமஸ்காரம்! அக்கொடியவர்களுக்கு நமஸ்காரம், இம்சை புரிவோருக்கு நமஸ்காரம். அவர்கள் அனேவரும் பிரம்மமே'' என்று வேதத்தில் ஒரு சுலோகம் கூறுகிறது. இதனுலேயே இராவணனே இராமனது பகைஉருவில் வந்த பக்தன் என்று துளசிதாஸர் கூறுகிருர் இராமனிடத்தும் இராவணனிடத்தும் உள்ள பரம்பொருள் ஒன்றே.

114

எறும்பு தொடங்கி பிரமாண்டம் ஈருக எங்கும் பரம் பொருளே பரந்திருக்கிறது, கருணேயுள்ள ஞானமூர்த்தியே வாஞ்சையும் அழகுமுள்ள பரம்பொருளாய் நாற்புறமும் எங்குமே அப்பரம்பொருள் நிறைந்து விளங்குகிறது. இதைக்காண்பதே விபூதியோகம்.

பதினேரும் அத்தியாயம்

115

இந்த விசால கிருஷ்டி பரம்பொருளின் சொரூபத்தின் ஓர் அமிசமே, அதன் மற்ருேர் அம்சம் காலம். இக்கால வெள்ளம் ஒரே வகையாய் ஓடிக்கொண்டே இருக்கிறது. அதன் தோற்று வாயும் தெரிய வில்லே. அதுபோய் கலக்கும் கடலும் தெரியவில்லே. கற்பனேக்கு எட்டாத இந்த விராட் பரம்பொருளே காணவேண்டும் என்ற அவா அர்ச்சுனன் மனதில் எழுந்தது.

116

இவ்விசுவரூபத்தில் எனக்குத் தனிஆசை இல்லை. சிறிய உருவத்திலேயே எனக்குத் திருப்திதான். விசுபரூபத்தில் வியாபித்துள்ள ஆண்டவனே பூரணமாய் ஒரு சிரிய விக்கிரகத்திலும் வியாபித்திருக்கிருன். அமுதக்கடலில் உள்ள இனிமை அதன் ஒவ்வொரு துளியிலும் இருக்கிறது. அமுதம் ஒரு துளியே அருந்தியபோதிலும் நமக்குச் சாகாவரம் கிடைத்து விடும். ஆகையால் ஆண்டவன் எனக்குத் தன் பேருருவைக் காட்டவேண்டும் என்ற ஆவல் எனக்கில்லை. அர்ச்சுனனைப் போல் விசுவரூபதரிசனம் அளிக்க வேண்டுமென்று கோர எனக்குத் தகுதியும் இல்லை.

117

விக்கிரக ஆராதனைக்கு அடிப்படையாக உள்ள கருத்து இதுவே. ஒரு சிறிய பொருளில் அகில சிருஷ்டியையும் உணர உதவும் வித்தையே விக்கிரக ஆராதனை. இது வெறும் கற்பனை அல்ல. அனுபவத்தில் வந்த விஷயம். விராட் உருவில் உள்ளவை எல்லாம் இச்சிறிய விக்கிரகத்திலும் அடங்கியிருக்கிறது.

118

சிறிய சகுணமான அழகிய உருவில் தோன்றும் அன்பு விசுவரூபத்தைப் பார்ப்பதில் ஒருபொழுதும் ஏற்படாது. அர்ச்சுனன் நிலை இவ்வாறே ஆகிவிட்டது. அவன் விராட் ரூபத்தைக்கண்டு வெடவெடத்துப்போய், "பகவானே, எனக்கு உமது பழைய இனிய உருவைக் காட்டும்" என்று வேண்டுகிருன்.

119

நட்சத்திரங்கள் எவ்வளவு சாந்தமாய் அடக்கமாய்க் காணப்படுகின்றன ! அதே நட்சத்திரம் நம் அருகிலே வந்து விட்டாலோ இந்த உலகம் எரிந்து சாம்பலாகிவிடும், ஆண்டவனது இவ்வெல்லையற்ற பிரமாண்டம் முழுமையிலும் எவை எவை எங்கெங்கே எப்படி இருக்கின்றனவோ அப்படியே இருக்கட்டும்.

120

ஆசிரியரிடம் பணிவாய் விலகி உட்காருவோம். ஆனால் தாயிடமோ மடியில் போய் அமருவோம். நறுமலரைக் கையில் எடுப்போம். தீயைக் கண்டால் தள்ளி நிற்போம் நடத்திரங்கள் தொலைவிலேயே அழகாய்த் தோன்றுகின்றன. இதே நிலைமைதான் சிருஷ்டியின் விஷயத்திலும்.

121

காலங்கள் மூன்றும் நம் எதிரில் தோன்றுவதால் இன்பம் ஏற்படும் என்று சொல்லுவதற்கில்லை. கடந்த காலமும் எதிர்காலமும் அனாதியாயிருக்க இச்சிறிய நிலையற்ற நிகழ் காலம் மட்டுமே நம்முடையது. பரம்பொருளாம் எல்லையற்ற விசால மூர்த்தியின் ஒரு காலோ, காலின் ஒரு விரலோ எனக்குக் கிடைப்பினும் போதும், அது என் பாக்கியமே! பாதங்கள் கிடைத்தாலே போதும், எனக்குள்ள உரிமை இவ்வளவே. விசுவரூபத்தை வருணிக்கும் சுலோகங்களை ஓதி நம் மனத்தின் பாவத்தைக் கழுவி அதைப் புனிதமாக்கு வோம்.

122

ஆண்டவனுடைய இவ்வருணனை முழுவதிலும் ஒரு இடத்தில் அறிவு சிந்திக்கிறது. பகவான், "அர்ச்சுனா, இவர்கள் அனைவரும் இறப்பவர்களே. நீ ஒரு நிமித்தமாய், வெறுங்காரணமாய் இரு, எல்லாவற்றையும் செய்பவன், பொறுப்பேற்பவன் நான் இருக்கிறேன்" என்கிறார். நாம் ஆண்டவன் கையில் ஒரு கருவியாகிவிட வேண்டும். அவன் கையில் நாம் குழலாகி விடவேண்டும். குழலாதல் என்றால் உள்ளீடற்றுக் காலியாதல் என்றாகும். ஆனால் என்னுள்ளே தான் விகாரங்களும் வாசனைகளும் நிரம்பிக்கிடக்கின்றனவே! இந்நிலையில் என்குழலில் இனிய கீதம் எப்படிக் கிளம்பும்? நான் ஆணவமற்ற வனாய் ஆக வேண்டும்.

பன்னிரெண்டாம் அத்தியாயம்

123

அர்ச்சுனன், ''பகவானே, சிலர் சகுணத்தை வழிபட, வேறுசிலர் நிர்குணத்தை உபாசிக்கிறார்களே; இவை இரண்டினுள் உங்களுக்குப் பிடித்தமானது?'' என்று கேட்கிறான்.

பகவான் இதற்கு என்ன பதில் அளிப்பார்? ''அந்த சகுண பக்தன் எனக்குப் பிரியமானவன்' அந்த மற்ற பக்தனும் எனக்கு வேண்டியவனே'' என்று பகவான் ஏதாவது சொல்லியாக வேண்டுமே என்று பதில் சொல்லிவிட்டார்.

124

இருபக்தர்களும் முற்றிலும் ஒரே வகையினரே. இருவரின் தகுதிகளும் ஒரே தன்மையனவே. அவைகளை ஒப்பு நோக்குதல் வரம்பை மீறிய செயலாகும்.

125

சகுணபக்தன் புலன்களின் மூலமாய் ஆண்டவனுக்குச் சேவை செய்கிறான். நிர்குண பக்தனோ மனதினால் உலக நன்மைக்கானவற்றைச் சிந்திக்கிறான். முதல்வன் வெளிச்சேவையில் ஆழ்ந்திருப்பவனாகி, உள்ளுக்குள் இடையறாது சிந்தித்தவண்ணம் இருக்கிறான். மற்றவனோ பிறர் பார்க்கும்படி நேரடியான சேவை செய்யாதிருப்பினும் உள்ளே அவனது மாபெரும் சேவை நடந்த வண்ணம் இருக்கிறது. இத்தகைய இவ்விரு பக்தர்களுள் சிறந்தவன் எவன் ?,இருவரும் பகவானுக்குப் பிரியமானவர்களே. ஆனால் இவைகளுள் சகுணபக்தி அதிகச் சுலபமானது.

126

சகுண உபாசகனுக்கு பொறிகள் கருவிகளே. கண் களால் கடவுளைத் தரிசிக்கிறார். காதுகளால் அவர் கதை களைக்கேட்கிறார். வாயினால் அவரது திருநாமத்தை செபிக்

கிறார். கைகளால் பாத சேவைபுரிகிறார். கால்களால் தல வழிபாடு செய்கிறார்.

127

நிர்குண உபாசகருக்கோ பொறிகள் தடையாய்த் தோன்றுகின்றன அவர் அவைகளை அடக்கிவைக்கிறார், அறையிலிட்டுப் பூட்டிவிடுகிறார். அவைகளுக்குக் காவல் வேறு போட்டுவிடுகிறார்.

சகுண உபாசகருக்கோ இவற்றில் எதுவும் செய்ய வேண்டியதில்லை. அவர் தமது பொறிகளை ஆண்டவனுக்கு அர்ப்பணம் செய்து விடுகிறார். இம்முறை சுலபமானது; மற்றது சிரமமானது.

128

சுலபமானது என்பதைத் தவிர இன்னும் ஒரு விஷயம் இருக்கிறது. நிர்குண உபாசனையில் பயமுண்டு. நிர்குணம் ஞானமயமானது; சகுணமோ அன்புமயமானது. சகுணத்தில் கனிவு உண்டு அதில் பாதுகாப்பு உண்டு. நிர்குணத்தில் சிறிது ஆபத்திருக்கிறது.

129

ஒரு காலத்தில் நான் ஞானத்தை அதிகமாய் நம்பியிருந்தேன். ஆனால் இப்பொழுது அனுபவத்திலிருந்து வெறும் ஞானம் மட்டும் இருந்தால் போதாது என்று உணர்ந்து கொண்டேன். ஞானத்தினால் மனத்திலுள்ள ஸ்தூலமான அழுக்குப் பொசுங்கிச் சாம்பலாகி விடுகிறது. ஆனால் சூக்குமமான நுண்ணிய அழுக்கைப் போக்கும் சக்தி அதற்கில்லை. பக்தி என்ற நீருக்குத்தான் அந்த சக்தி இருக்கிறது.

இங்கே ''ஞானம்'' என்ற சொல்லுக்கு குறுகிய பொருள் கொள்ளப்பட்டதாக எவரேனும் சொல்லலாம். ஆனால் மண்ணாலான இவ்வுடலில் இருந்து வரும் வரை சுத்த ஞானம் ஏற்படுவது சிரமம் என்றே சொல்லுவேன்.

130

சகுணம் நிர்குணத்தின் உதவி இருக்கவேண்டும். பக்திப் பெருக்கு சகுணத்திலிருந்து தோன்றுதல் சரியே; ஆனால் அது தத்துவப்பற்றில் நிர்குணத்தில் போய்ப் பூர்த்தியாக வேண்டும். பக்தியின் வயிற்றிலிருந்து ஞானம் தோன்ற வேண்டும். பக்திக்கொடியில் ஞானப் பூ மலர வேண்டும்.

131

புத்த பகவான் இவ்விஷயத்தைக் கவனத்தில் கொண்டிருந்தார். இதனாலேயே அவர் மூன்று வகை உறுதிகளைப் போதித்தார். ''புத்தம் சரணம் கச்சாமி, சங்கம் சரணம் கச்சாமி, தம்மம் சரணம் கச்சாமி.'' முதலில் தனிநபர் பற்று, பிறகு சங்கப்பற்று. இறுதியில் தத்துவப் பற்று. நிர்குணம் இல்லாதபோது சகுணம் குறை பாடு உள்ளதாகி விடும். நிர்குணத்தின் வரம்பு சகுணத்தை ஒழுங்கு கெடாது பார்த்துக் கொள்ளுவதால் சகுணம் நிர்குணத்துக்குக் கடமைப்பட்டதாகிறது. சகுணமும் நிர்குணமும் ஒன்றுக்கொன்று உதவுபவை என்பது கருத்து.

132

சகுணம் கர்ம யோகநிலை. நிர்குணம் சந்நியாச யோகநிலை. கர்மயோகமாவது சந்நியாசமாவது, சகுணமாவது நிர்குண-மாவது-இரண்டும் ஒன்றே. இறுதியில் பகவான், ''அர்ச்சுனா, நீ சகுணனாயினும் சரி, நிர்குணனாயினும்சரி, பக்தனாய் மட்டும் கட்டாயம் இரு. வெறுங்கல்லாய் இராதே என்கிறார்

பதின்மூன்றும் அத்தியாயம்

133

உடலை ஆன்மாவிலிருந்து பிரித்துணரும் பயிற்சி பிள்ளைப் பிராயம் முதலே அளிப்பதற்குத் திட்டம் செய்ய முடியுமானால் அது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விஷயமாக இருக்கும் தற்காலத்தில் பிழைபட்ட கல்வியின் விளைவாக மிகவும் தீய

ஸம்ஸ்காரங்கள் குழந்தைகளின் மனதில் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ''நான் வெறும் உடலே' என்பதற்கு வெளியே இக்கல்வி நம்மை அழைத்துப் போவதே இல்லை. எல்லாம் உடலைப்பற்றிய விவகாரங்களே நடந்து வருகின்றன.

134

போதனை சாத்திரத்தில் இதை ஒரு மகத்துவம் வாய்ந்த தத்துவம் எனக் கொள்ள வேண்டும். தன்னால் போதிக்கப் பெறுபவன் சர்வாங்க சுந்தரன் என்ற பாவனை குருவுக்கு இருக்க வேண்டும். கணக்குப் பாடத்தில் பிழை நேர்ந்து விட்டால் கன்னத்தில் அறைகிறார்கள். விடை தவறியதற்கும் கன்னத்தில் அறைவதற்கும் என்ன சம்பந்தம்? இவ்வாறு அடித்துப் புடைத்து அவனுடைய மிருகத்தனத்தையே வளர்க்கிறோம். ''நீ இவ்வுடலே'' என்ற பாவனையை உறுதிப்படுத்துகிறோம். வாழ்க்கையை அச்சத்தின் அடிப்படையில் அமைக்கிறோம்.

135

ஆடாமல் அசையாமல் வெளியிலிருந்து வேடிக்கை பார்ப்பவன் ஆட்டத்தின் குணம் குற்றங்களை நன்றாய் உணர முடிவதைப்போல் நாமும் உடல், மனம், புத்தி ஆகியவற்றிலிருந்து நம்மை வேறுபடுத்திக் கொள்ளும் பொழுது அவற்றின் குறை நிறைகளை உணரமுடியும். இதைப் புரிந்து கொள்ள முடியுமானால் இறுதியில் இறக்கும் பொழுது அவன் உடலே மறைகிறது, அவன் இறப்பதில்லை என்ற விஷயமும் புரியும். 'உடலே நான், என்ற பாவனையின் விளைவாய் மனிதன் அல்லும் பகலும் இவ்வுடலைப்பற்றியே கவலையுறுகிறான்.

136

எத்தகைய உணவு கொள்ளுவதினால் நம் அறிவு சாத்துவிகம் பெறும் என்னும் விஷயத்தில் நாம் கவனம் செலுத்துவதில்லை. நாம், கவனிப்பதெல்லாம் உடலின் எடை எப்படி ஏறும் என்பதையே ! இவ்வுடல் ஒரு சாதனமே,

லட்சியமல்ல, இது புரியுமானால் உடலைப்பற்றி இவ்வளவு அமளிதுமளி, ஆட்டபாட்டம் இராது.

137

இவ்வுடலை அலங்கரிப்பதில் எத்தனை ஏற்பாடுகள்! வழுவழுப்பான துணி, நல்ல கரையுள்ள சித்திர வேலைப்பாடுகள்! இதெல்லாம் எதற்கு? பகவானுக்கு அறிவில்லையா? இவ்வுடலுக்கு அழகிய சித்திர வேலைப்பாடுகள் தேவையானால் புலியின் தோலில் கைத்திறனைக்காட்டிய அவர் நம் உடலிலும் காட்டியிருக்க மாட்டாரா? மனித உடலை அலங்கரிக்கவேண்டும் என்பது ஆண்டவன் நோக்கமே அல்ல. சிருஷ்டியில் உள்ள அழகைக் காணத்தவறி தன் உடலை அலங்கரிப்பதில் ஈடுபட்டு, மனிதன் வழி தவறிவிட்டான். உள்ளத்தை அழகுபடுத்துவதில் அவனது கவனம் செல்லக்காணோம்.

138

இவ்வுடலிலிருந்து வேறுபட்டதாய், அழிவற்றதாய், களங்கமற்றதாய் உள்ள ஆன்ம தத்துவமே நான் (தத்துவமணி), அவ்வான்ம தத்துவத்தின் பொருட்டே எனக்கு இவ்வுடல் கிடைத்திருக்கிறது. நான் அதைக் காக்கும் பொருட்டு இவ்வுடலை அதற்குக்கருவியாக்குவேன். இவ்வேலைக்குத் தகுதியற்றதாகி விடும் பொழுது இதை வீசி எறிய நான் தயங்கேன். சத்தியாகிரகத்தின் மூலம் நமக்குக் கிடைக்கும் படிப்பினை இதுவே.

139

''உடலிலிருந்து நான் வேறுபட்டவன்'' என்பதைப் புரிந்து கொள்ளாதிருக்கும் வரை துஷ்டர்கள் நம்மை அடிமைப்படுத்திக் கொண்டே இருப்பார்கள். அச்சம் காரணமாகவே நமக்குக் கொடுமை புரிவது அவர்களுக்குச் சாத்தியமாகிறது. உடற்பற்றைத் துறந்ததும் நீங்கள் சுதந்திரம் பெற்று விடுகிறீர்கள். அதன்பின் எவராலும் உங்கள் மீது ஆதிக்கம் செலுத்த இயலாது.

140

உடற்பற்று இருக்கும் வரை அச்சமும் இருந்து கொண்டேதானிருககும். உறக்கத்தில் என்னைக் காப்பவர் யார்? நான் ஏதோ சக்தியை நம்பித் தூங்குகிறேன். எந்த சக்தியை நமபி உயிரினங்கள் உறங்குகின்றனவோ அதை நம்பியே நானும் உறங்குகின்றேன். தாயின் மடியில் குழந்தை கவலையற்றுத் தூங்குகிறது. நீங்களும் நானும் சிருஷ்டி எங்கும் வியாபித்துள்ள அந்தத்தாயின் மடியில் அச்சமற்று அதே நம்பிக்கையுடன் உறங்கும் பயிற்சி பெறவேண்டும். அந்த நம்பிக்கையே நம் பாதுகாப்பு,

141

இறுதியாக சங்கற்பம் அல்லது தீர்மானம் செய்வதையும் விட்டு விடவேண்டும். சங்கற்பம் செய்பவரும் ஆண்டவராகவே இருக்கட்டுமே! எல்லாச் சுமைகளையும் குதிரையின் மீது ஏற்றிவிட்ட பிறகு சிலவற்றைமாத்திரம் எதற்காக என்தலையில் இருக்க வேண்டும்? என்தலைச்சுமையோடு குதிரையின் மீது அமரும் போது அந்தபாரத்தையும் குதிரைதானே சுமக்கிறது ஆகையால் எல்லாச்சுமையையும் அதன் முதுகிலேஏற்றிவிடு. இவ்வாறு வாழ்க்கையின் எல்லா அமளிதுமளிகளும் ஏற்றத் தாழ்வுகளும், எல்லாமே கடவுள் மயமாய் இறுதியில் ஆகி விடுகின்றன. உடலின் திரை விலகியதும் சீவனும் சிவனும், ஆன்மாவும் பரமாத்மாவும் ஒன்ருகி விடுகின்றனர்.

பதினுன்காம் அத்தியாயம்

142

அகில சராசரங்கள் ஆகிய அனைத்தின் இயற்கையிலும் மூன்று குணங்கள் இருக்கின்றன. ஆயுர்வேதத்தில் கபம், பித்தம், வாதம் என்பதுபோல சத்துவம், இராசதம், தாமசம் என்ற முக்குணங்கள் பிரகிருதியில் நிறைந்திருக்கின்றன. இம்மூன்றிலிருந்து ஆன்மாவை பிரித்து விடுவேமாயின் உடலிலிருந்தும் ஆன்மாவைப் பிரித்து விடலாம்.

143

தற்காலச் சமூக நிலையில் தமோகுணத்கின் பயங்கர விளைவுகளைக் காண்கிறோம். இதன் முக்கிய விளைவு சோம்பல். இதிலிருந்து தூக்கம், மெய்மறதி, தோன்றுகின்றன. இம் மூன்றையும் வென்று விடுவோமாயின் தமோகுணத்தை வென்றதாகவே கொள்ளலாம். தற்காலத்தில் எங்கும் சமூக சீர்திருத்தம் பற்றிப் பேசப்படுகிறது. ஒருபுறம் செல்வம் குவிந்திருக்க, மறுபுறம் ஏழ்மை. இவ்வேறுபாடு எவ்வாறு நீங்கும்? ஒரேவழிதான் உண்டு. அது சோம்பலை விட்டு அனைவரும் உழைக்கச் சித்தமாதலே, துன்பம் சோம்பலால் விளைகிறது. எல்லோரும் உடலால் உழைக்க உறுதி கொண்டால் துன்பம் விலகிப்போம்.

144

சமூகத்தில் இருவகை மனிதர்கள் ஏற்பட்டுவிட்டார்கள். ஒருவரோ அல்லும் பகலும் உழைத்துழைத்துச் சாகிறவர்கள். மற்றவரோ கையை அசைத்து ஒரு துரும்பையும் எடுத்துப் போடாதவர்கள்.

சில ருண்டங்கள், சில முண்டங்கள். ஒருபுறம் உடலில்லாத வெரும் தலைகள், மறுபுறம் தலையில்லா வெறும் உடல்கள். உடல் உழைத்துக் கொண்டிருக்க தலை வெறும் சிந்தனை மட்டும் செய்கிறது. இவ்வாறு சமூகத்தில் இந்த இராகு - கேதுகள் இருவகையாய் இருக்கிறார்கள். இவர்கள் ஒவ்வொருவரும் தலையும் உடலுமாய் இருப்பார்களானால் சிரமமிராது. ஒவ்வொருவரும் சோம்பலை அகற்ற உடல் உழைப்புச் செய்ய வேண்டும். சோம்பலை அகற்றுவதற்கு இது ஒன்றே வழி. இதைச் செய்யாவிடில் இதற்குரிய தண்டனை இயற்கையிட மிருந்து கிடைக்காதிராது.

145

இரண்டாவது தூக்கத்தை வெல்லுதல். தூக்கம் உண்மையில் புனிதமானதே. உறக்கம் ஒரு யோகமே. தூக்கம் அதில் கழியும் நேரத்தைப் பொறுத்ததல்ல. அது

எவ்வளவு ஆழ்ந்தது என்பதுதான் முக்கியம் ஆழ்ந்த உறக்கமே உண்மையான உறக்கம். ஆழ்ந்த உறக்கம் எப்படி வரும் ? அதற்கும் உடலுழைப்பே மருந்து.

146

அதிக உறக்கத்தினுல் சோம்பலும்,சோம்பலால் மறதியும் தோன்றுகிறது. மறதிக்குக்காரணம் மனத்தின் சோம்பலே. மறதி என்பது மரணமே. இம்மறதியை வெல்வதற்குச் சோம்பலே வெல்ல வேண்டும். சோம்பலே வெல்வதற்கு உடலாலுழைக்க வேண்டும்.

147

இரசோகுணம் தமோ குணத்தின் மற்ருெரு வகையே. இரண்டும் ஒன்றையே குறிக்கும் இரு சொற்கள் என்பது அதிகப் பொருத்தமானது. தமோ குணத்திலிருந்து இரசோ குணமும், இரசோ குணத்திலிருந்து தமோகுணமும் தோன்று கின்றன. கால்பந்து உதைவாங்குவதைப் போல் மனிதன் இரசோ—தமோகுணங்களிடம் மொத்து வாங்கிக்கொண்டே வாழ்வைக் கழிக்கிருன்.

148

இரசோகுணத்தின் முக்கிய இலட்சணம் பேராசை மயமான கர்மப்பற்று. அதன் பயனுக வாசனைகள், விவகாரங்கள் அடக்க இயலாமற் போகின்றன. இரசோ குணம் உடனுக்குடன் பயனை விரும்புகிறது. இரசோகுண முள்ள மனிதன் எப்பொழுதும் இதை ஏற்பதும் அதைத் துறப்பதும் என்று செய்து கொண்டே இருப்பான். ஓர் இடத்தில் காலே ஊன்றி நிற்பதென்பது அவனுக்குத் தெரியாது. சுதர்மத்தை விட்டு அலேவது தான் மிச்சம். ஆகவே சுதர்மம் இயற்றுதலே இரசோகுணத்தை வெல்லும் வழி. நாம் சுதர்மத்தில் ஆழ்ந்து விடும் பொழுது இரோச குணம் இரசமற்றுப்போகும். இரசோகுணத்தை வயப்படுத்து வதற்குள்ள வழி இதுவே.

149

இனி சத்துவகுணம் எஞ்சியிருக்கிறது. இதனிடமும் நாம் மிகக் கவனமாய் இருந்துவர வேண்டும். இரசோ—தமோ குணங்கள் போனபிறகு எஞ்சியிருக்கும் சத்துவகுணம் பற்றிய அபிமானம் நம்மைப் பற்றிக் கொள்ளாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். சத்துவகுணத்தின் மீது வெற்றி கொள்வது என்பதற்கு அதுபற்றி நாம் கொள்ளும் கர்வத்தை, அதனிடம் நமக்குள்ள பாசத்தை அகற்றுதல் என்பது பொருள். சத்துவகுணத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியதே; ஆனல் அதனை அகங்காரமற்றதாய், கர்வ மற்றதாய் ஆக்கிவிடவேண்டும்.

150

சத்துவ குணத்தின் கர்வத்தின் மீது வெற்றி கொள்வது எப்படி ? சத்துவ குணத்தை நம் சுபாவமாக்கிவிட வேண்டும். ''நான் மூச்சு விடுகிறேன்'' என்று எவரும் கூறிப் பெருமைப் படுவதில்லை. ஏனெனில் அது இயற்கையாகிவிடுவதால். அதுபோல் சத்துவகுண காரியங்களும் நமக்கு இயற்கை யாகிவிட வேண்டும். ஒளி தருதல் சூரியனது இயற்கை அதில் சூரியனுக்கு கர்வம் ஏற்படுவதில்லை. இவ்வாறு நம் சுபாவமே சத்துவ குணமயமாகி விடும்போது நமக்கு அது பற்றி கருவமே இராது. சத்துவகுணத்தை வெற்றி கொள்ள இது ஒரு வழி. மற்றொரு வழி அதிலுள்ள பற்றையும் ஆசையையும் விட்டு விடுதல். உதாரணமாக உயிர்களிடத்து அன்புவேண்டும், ஆசை கூடாது.

151

சத்துவ குணமயமாகி விட்டபோதிலும், அகங்காரத்தை வென்றுவிட்ட போதிலும், ஆசையைத் துறந்து விட்ட போதிலும் இவ்வுடல் இருக்கும் வரை இடையிடையே இரசோ – தமோ குணங்கள் தாக்கிக் கொண்டேதானிருக்கும். அதை வெல்லுவதற்கும் ஒரே வழி தானுண்டு. அவ்வழி பகவானிடம் பக்தி புரிதலே, இறுதியில் ஆண்டவனது அருள்

கிட்டியாக வேண்டும். பக்தியினால் அவனருளுக்குப் பாத்திரமாக வேண்டும். இதைத்தவிர வேறு உபாயம் இருப்பதாய்த் தோன்றவில்லை.

பதினைந்தாம் அத்தியாயம்

152

கர்மம், ஞானம், பக்தி ஆகியவற்றை நாம் வெவ்வேருகக் கூறி வாழ்க்கையைத் துண்டாட முடியாது. முக்காலியின் ஒருகால் ஒடிந்து போனால் அது நிற்காது. வாழ்க்கையின் நிலையும் அதுவே. ஞானம், பக்தி, கருமம் மூன்றும் சேர்ந்து ஒரே விசாலமான பொருளாகிறது. ஆயினும் 'பக்திமார்க்கம் சுலபமானது

153

நம் செயல் ஒவ்வொன்றும் பக்தி மயமாய் இருக்க வேண்டும். நம் காரியங்கள் அனைத்தும் பூசைக்குரிய காரியங்கள் ஆகிவிடவேண்டும். அவை கடவுள் வழிபாடாகும் போது நமது விவகாரங்கள் எவ்வளவு தூரம் மாற்றம் பெறுகின்றன என்பதைப் பாருங்கள்! வாழ்க்கை கடவுள் வழிபாடு மயமாகிவிடவேண்டும் என்பது கீதையின் தீவிர விருப்பம். இதுவே புருஷோத்தம யோகம்.

154

கர்மத்தில் பக்தியை இணைப்பதைப்போல் ஞானத்தையும் இணைக்க வேண்டும். இவை மூன்றும் வெவ்வேறு என்பது இதன் பொருளல்ல. புரிவதற்காக நாம் இவ்வாறு வேறுபடுத்திப் பேசுகிருேம். இம்மூன்றும் இணைவதால் ஓர் அபூர்வமான வாழ்க்கை ரசாயனம் அமையும். இதுவே அத்வைதம்; இது பரிபூரண புருஷோத்தம யோகம்.

155

சில சாதகர்களுக்கு தம் நிஷ்டை காரணமாக கர்மமொன்றேதான் தோன்றுகிறது. சிலர் பக்தியை ஒரு தனி

வழியாய்க் கற்பனே செய்து கொண்டு அதையே முழுதும் வற்புறுத்துகிருர்கள். சிலர் போக்கோ ஞானத்தை நோக்கி யதாயிருக்கிறது. இதற்கு மாருக கர்மம், பக்தி, ஞானம் என்பவற்றைக் கூட்டியமைப்பதையும் நான் ஒப்புக்கொள் ளேன். மூன்றையும் கலந்து கதம்பமாக்கவும், நான் சம்மதியேன். எனக்கு கர்மமே தான் பக்தி, அதுவேதான் ஞானம். ஒரு மிட்டாய்த் துண்டின் இனிப்பு, அதன் உருவம் அதன் எடை என்ற இவை வெவ்வேருனதல்ல அவ்வாறே வாழ்க்கையின் ஒவ்வொரு காரியத்திலும் பரமார்த்தம் பொதிந் திருக்க வேண்டும் இதுவே புருஷோத்தமயோகம் என்னப்படுவது.

பதினுரும் அத்தியாயம்

156

காமம், பக்தி, ஞானம் ஆகியவை நம் வாழ்க்கையில் வந்து விட்டன என்பதை எப்படி உணருவது! வயலில் உழைத்துப் பாடுபடுகிரேும் எனில், அதன் விளேவான தானி யத்தை அறுவடை செய்து, அளந்து கட்டி, வீட்டில் சேர்க் கிரேும். இவ்வாறே நாம் செய்யும் சாதனேகளினுல் எந்தெந்த நற்குணங்கள் நம்முள் இடம் பெற்றன, வாழ்க்கைக்கலே எவ்வளவு வளர்ந்து முன்னேறிற்று என்பதைக் கொண்டு உணரலாம் இக்கலேயை கீதை தேவசம்பத்து என்று அழைக்கிறது.

157

கண்ணுடியில் அழகியதோ, விகாரமானதோ, என் பிரதி பிம்பமே எனக்குக் காணப்படுகிறது. அதுபோல் என் மனத்தி லுள்ள கெட்ட, நல்ல எண்ணங்களே எனக்கு வெளியில் பகைவனுயும் நண்பனுயும் காணப்படுகின்றன. அகத்தில் நடக்கும் போருக்கும் புறத்தே நடப்பதற்கும் வேற்றுமை ஏதுமில்லே பார்க்கப் போனுல் உண்மையில் போர் நடப்பது அகத்திலே தான்.

158

நம் அந்தக் கரணத்தில் ஒரு புறம் நற்குணங்கள் இருந்தால், மறுபுறம் துர்க்குணங்கள் இருக்கின்றன. அவை தம் தளங்களைச் சரியாய் அமைத்து வைத்திருக்கின்றன. சேனைக்கு சேனாதிபதிதேவை. இங்கு நற்குணங்களுக்குச் சேனாதிபதி அபயம் (அஞ்சாமை) தேவசம்பத்தில் அபயத்திற்கு முதலிடம் அளிக்கப்பட்டிருக்கிறது. இது ஏதோ தற்செயலாக நிகழ்ந்ததல்ல. தீர யோசித்து முதலிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அஞ்சாமை இல்லாதவிடத்து எந்த நற்குணமும் வளர்வதற்கில்லை. உண்மை இல்லாவிடில் பிற நற்குணங்களுக்கு மதிப்பு இல்லாது போகிறது. ஆனால் உண்மைக்கோ அஞ்சாமை அவசியம். அஞ்சாமை எல்லா நற்குணங்களுக்கும் அதிநாயகன்.

159

சேனையின் இருபுறமும் கவனித்துக் கொள்ளவேண்டும். நற்குணங்களின் முன்புறத்தில் அபயம் என்றால் பின்புறம் பணிவு பாதுகாத்து வருகிறது. எல்லா நற்குணங்களின் அகங்காரம் அல்லது கர்வம் ஏற்பட்டு விடுமாயின் சேர்த்த சொத்தை எல்லாம் இழக்க நேரும். இதற்குப் பாதுகாப்பு பணிவு இவ்வாறு முதலில் அஞ்சாமையும் இறுதியில் பணிவையும் கொண்டு தேவசம்பத்து வரிசைப் படுத்தப் பட்டுள்ளது.

160

இவ்விருபெருங் குணங்களிடையே அமைக்கப்பட்டுள்ள இருபத்து நான்கு குணங்களும் அநேகமாக அஹிம்சையின் பல்வேறு உருவங்களே. அஹிம்சை, சத்தியம் என்ற இவ்விரு குணங்களிலேயே எல்லா நற்குணங்களும் அடங்கிவிட்டன. குணங்கள் அனைத்தையும் பிழிந்து அவற்றின் சாரம் எடுக்கப் படுமாயின் இறுதியில் அஹிம்சை சத்தியம் என்ற, இவ்விரண்டே எஞ்சும். அஞ்சாமை சத்தியத்துக்கும் பணிவு அஹிம்சைக்கும் அறிகுறி.

161

அஹிம்சை எம்முறையில் வளர்ந்து வந்தது என்பது கவனிக்கத் தக்கது. முதலில் அஹிம்சையை விரும்பிய மனிதன் இம்சையின் தாக்குதலிலிருந்து தப்புவதெப்படி என்று யோசிக்கத் தொடங்கினுன். இப்போது காப்பிற்காக முதலில் க்ஷத்திரிய வர்க்கம் அமைக்கப்பட்டது. ஆனல் அதுவே பின்னர் சமூகத்தைப் புசிக்கத் தொடங்கிற்று.

162

இம்மதம் பிடித்த க்ஷத்திரியரிடமிருந்து சமூகத்தைக் காப்பதெப்படி? ஓர் அஹிம்சா பக்தரான பரசுராமர் க்ஷத்திரியர்களே அழிக்கத் தலைப்பட்டார். இம்சையை அகற்றும் பொருட்டு இம்சை வழியிலே இறங்கினர். ஆகவே அதுவெற்றி பெறவில்லை. க்ஷத்திரியர்களை அழிக்கப்புறப்பட்ட அவரே தாமும் அவர்களைப் போன்றவராகி அவர்களின் எண்ணிக்கையைப் பெருக்கி விட்டார்.

163

அடுத்த சோதனை 'முள்ளைக் கொண்டு முள்ளை எடுக்க வேண்டும்' என்பது, விசுவாமித்திரர் இராம-லட்சுமணர்களை அழைத்துப்போய் இராட்சதர்களை அழிக்கச் செய்தார். இதனல் அஹிம்சையால் தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்ள முடியவில்லை என்பதாகிறது. க்ஷத்திரியன் எவனும் கிட்டாவிடில் அஹிம்சாவாதிகள் தம் உயிரை விடத் துணியும் அளவிற்கு அஹிம்சைப் புலம் தயராகி விட்டது. ஆயினும் அவர்கள் பிறர் தம்மைப் பாதுகாக்க வேண்டுமென்று எதிர் பார்த்தார்கள். இத்தகைய பலவீனமிருக்குமிடத்தில் அஹிம்சை அதன் பூரண நிலையை எய்துவதில்லை.

164

மூன்ருவது சோதனை தொடங்கிற்று, "நாம் பாதுகாப்புக் காகப் பிறர் உதவியை ஒருபோதும் நாடோம். நம் அஹிம்சையே நம்மைக் காக்கும்." என்று அவர்கள் முடிவு

செய்தார்கள். இச்சோதனை தனித்தனியே தனி நபர்களால் செய்யப்பட்டது. அது தனிநபர்களோடு நின்றுவிட்டது.

165

இன்று நாம் நான்காவது சோதனையில் ஈடுபட்டிருக்கிறோம். அதாவது சமூகம் முழுதுமே ஒன்று சேர்ந்து அஹிம்சை வழி மூலம் இம்சையை எதிர்த்தல் என்பது இது போன்று சுத்த அஹிம்சைச் சோதனைகள் இன்னும் எத்தனையோ நடைபெறும்.

166

புலால் மறுப்பு ஒரு அஹிம்சைச் சோதனையே. புலால் தின்பதனுல் யாகத்தில் பலியிடப்பட்ட பிராணிகளின் புலாலையே தின்னவேண்டுமென்ற விதி வகுத்தார்கள். இந்நிபந்தனை விளைவாக இம்சை நின்று போய்விடும் என்று எண்ணப்பட்டது. ஆனல் பின்னர் யாகம் செய்தலே ஒரு தினசரிக் காரியமாகி, இஷ்டப்பட்டபோதெல்லாம் யாகம் செய்து மாமிசம் தின்னத் தொடங்கினுர்கள்.

167

அப்பொழுது புத்த பகவான், ''உங்களுக்கு மாமிசம் தின்ன வேண்டுமென்ருல் தின்று தொலையுங்கள். ஆனல் பகவான் பெயரைச் சொல்லிக் கொண்டு தின்ன வேண்டாம்'' என்ருர்.

இவ்வாறு நாம் சிறிது சிறிதாய்ப் புலால் அருந்துவதை விடலானேம்.

168

அசுர சம்பத்தின் சாரம் ஆதிபத்தியம், கலாச்சாரம், செல்வம் என்றவைகளில் அடங்கி விட்டது.

169

பிராமணர்களும் ''எங்கள் கலாச்சாரமே தலைசிறந்தது'' என்கின்றனர். முஸல்மான்களும் இப்படித்தான். அதாவது

குர்ரானில் எழுதியிருப்பதொன்றே உண்மை என்கிருர்கள். கிறிஸ்தவர்களும் ''ஏசுநாதரிடம் நம்பிக்கை கொள்ளா திருக்கும் வரை பிறமதத்தவர் எவ்வளவு சிறந்தவராயினும் சுவர்க்கம் புக முடியாது'' என்கின்றனர். மக்கள் தம் வீடு களுக்கு அநேக வாயில்களும் பலகணிகளும் அமைத்திருக் கிருர்கள். ஆனல் பாவம், பகவானுடைய கோவிலுக்கோ இவர்கள் அமைத்திருப்பது ஒரே வாயில்!

170

ஐயா உங்கள் கலாச்சாரம் உண்மையாகவே சிறந்த தாயிருப்பின் அது உங்கள் நடத்தையில் வெளியாகட்டுமே! அவ்வாறு நடைபெறுவதில்லே. தம் வாழ்விலும், வீட்டிலும் காணுத கலாச்சாரம் ஒன்றை உலகெங்கும் பரப்ப வேண்டு மென்ற ஆவலுக்கே அசுரப்போக்கு என்று பெயர்.

171

இது போன்றே ''உலகின் செல்வம் அனைத்தும் வைத் திருக்கத் தகுதியுள்ளவன் நானே'' என்ற மனப்போக்கும், உலகின் செல்வமனைத்தும் சேர்த்துக் குவிப்பது எதற்காக? பிறகு எல்லாருக்கும் பகிர்ந்து கொடுப்பதற்காகவாம்? இதன் பொருட்டு நான் முதலில் என்னைச் செல்வத்துள் ஆழ்த்திக் கொள்ளுகிறேன்! இதுவும் ஒரு அசுர மனப்போக்கு.

172

செல்வத்தைச் சேர்க்க அதிகாரம் வேண்டும். அதிகாரம் முழுதும் என் கையிலே குவிந்திருக்க வேண்டும். எனக்கடங்கி, என் ஆட்சிக்குட்பட்டு நடத்தலே சுதந்திரம்!

இவ்வாறு கலாச்சாரம், செல்வம், ஆதிபத்தியம் என்ற இம்மூன்றும் அசுர சம்பத்தில்வற்புறுத்தப் படுகின்றன.

173

ஆண்டவன் அவதாரங்கள் எடுப்பது தருமத்தைப் பாது காக்கவேயன்றி மக்கள் கூட்டத்தைப் பாதுகாக்கவன்று. தருமத்தை அனுசரிப்பவனைப் பாவத்திற்கஞ்சுபவனைச்

சத்தியத்தில் உறுதிகொண்டவனாய் உள்ள ஒரே ஒரு மனிதன் இருக்கும் வரை கவலை இல்லை. இவ்விஷயத்தைக் கருத்திற் கொண்டு சிருஷ்டியில் முறைப்படி வாழ்வீர்; புலன்களை அடக்கிக்கொண்டு நடப்பீர்; வரம்புகடந்து, தலைதெறிக்க ஓடவேண்டாம்.

174

சம்சாகர சாகரத்திலிருந்து தொலைவில் கரைமீது நின்று கொண்டு கடலின் கொந்தளிப்பைக் காண்பதில் இன்பமுண்டு கடலில் மூழ்கிக் கொண்டிருப்பவனுக்கு மூக்கிலும் வாயிலும் தண்ணீர் ஏறிக்கொண்டிருக்க அவனுக்கு இன்பம் ஏது? மகான்கள் கடற்கரையில் நின்றபடியே காட்சி இன்பம் அனுபவிக்கிறார்கள். தாமரை இலைத் தண்ணீரைப் போல் தொடர்பின்றி வாழ்வாயாக.

பதினேழாம் அத்தியாயம்

175

சூரியன் ஞானிகளுக்கெல்லாம் ஆசிரியன். சூரியன் சுதந்திரமானவன், அதேசமயம் நெறிதவறாதவன். இந்நெறி தவறாமையிலேயே அவனது சுதந்திரத்தின் சாரம் அடங்கி யுள்ளது.

176

நாம் பிறக்கையில் மூன்று அமைப்புகளுடன் பிறவி எடுக்கிறோம், ஒன்று நம் உடல். இரண்டாவது நம்மைச் சுற்றியுள்ள எல்லையற்ற சிருஷ்டி. மூன்றாவது நாம் பிறந்துள்ள சமுதாயம், இம்மூன்று அமைப்புகளையும் நாம் துய்க்கிறோம்; அதனால் அன்றாடம் தேய்மானம் ஆகிறது. இதனை ஈடுசெய்வதற்கு நாம் இடையறாது கடமையாற்ற வேண்டும். இவற்றை நிறைவேற்ற யக்ஞம், தானம், தவம் விதிக்கப்பட்டுள்ளது.

177

யக்ஞத்தின் நோக்கம் என்ன? சிருஷ்டிக்கு ஏற்படும் நஷ்டத்தை ஈடுசெய்தலே ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் நாம் நிலத்தை உழுதுகொண்டு வருகிறோம். அதனால் நிலத்தின் சக்தி குறைந்துகொண்டே வருகிறது. ''பூமியை உழு, அதற்கு உரமிடு'' என்று யக்ஞம் சொல்லுகிறது. தேய்மானத்தை ஈடுசெய்தல் யக்ஞம்.

178

யக்ஞத்தில் உற்பத்தி செய்பவை அனைத்தையும் சுய நலத்திற்காகவன்றி நம்மால் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடுசெய்யும் கடமை உணர்ச்சியுடன் செய்து வரவேண்டும். இது நாம் செய்யும் பரோபகாரமல்ல. நாம் ஏற்கனவே கடன்பட்டவர்கள்! பிறக்கும் பொழுதே கடனைச் சுமந்தே வருகிறோம். இக்கடனைத் தீர்க்க நாம் செய்யும் உற்பத்தி ஒரு யக்ஞம்.

179

இரண்டாவது தானம். சமூகத்தின் கடனைத் தீர்ப்பதற்காகச் செய்யப்படும் காரியம் என்பதே அன்றி தானம் என்பது பரோபகாரம் என்பது பொருளல்ல. பிறரிடமிருந்து எதையும் பெறாது செய்யப்படுவதே பரோபகாரம். ஆனால் இங்கோ நாம் சமூகத்திலிருந்து ஏராளமாகப் பெற்றுக் கொண்டு விட்டோம். இக்கடனிலிருந்து விடுபடும் பொருட்டுச் செய்யப்படும் சேவையே தானம் சிருஷ்டியின் தேய்மானத்தை ஈடு செய்வது. யக்ஞம் என்றால் சமூகத்தின் கடனைத் தீர்க்கும் பொருட்டுச் செய்யப்படுவது தானம் ஆகிறது.

180

மூன்றாவது இவ்வுடலென்ற அமைப்பில் தோன்றும் விகாரங்கள், குற்றங்கள் ஆகியவற்றைப் போக்கித்துடைப்பதற்கெனத் தவம் கூறப்படுகிறது.

181

யக்ஞத்தின் மூலம் சிருஷ்டி அமைப்பில் சமநிலை ஏற்படுகிறது. தானத்தினால் சமூகத்தில் சமநிலை ஏற்படுகிறது தவத்தினால் உடல் சமநிலை எய்துகிறது.

182

யக்ஞம், தானம், தவம் ஆகியவற்றை இங்கு வெவ்வேறென்று கொண்டிருந்த போதிலும் உண்மையில் இவற்றினிடையே வேற்றுமை இல்லை. ஏனெனில் சிருஷ்டி, சமூகம் உடல் இம் மூன்று தனித்தனி அல்ல. இச்சமூகமும் இவ்வுடலும் சிருஷ்டிக்கு வெளியே உள்ளதல்ல. தானத்தையும் தவத்தையும் பரந்தபொருளில் யக்ஞம் என்றே அழைக்கலாம்.

183

யக்ஞத்தைச் சாத்துவிகமாக்க வேண்டும். நூற்பது ஒரு யக்ஞம். நூற்கும்போதே நம் ஆன்மா அதில் கலக்கா விட்டால் அது ஜீவனற்றதாகிவிடும். புறந்தே கை வேலை செய்ய அகத்தில் மனம் அதில் இணையவேண்டும். இதன் மூலம் சமூகத்திற்குப்பட்டகடனைத் தீர்க்கும் பொருட்டு இதில் ஈடுபட்டிருக்கிறோம் என்ற பாவனையோடு இயற்ற வேண்டும். இதனால் சித்த சுத்தி ஏற்படும்.

184

நூல்நூற்கும் போது நாம் இந்நூலின் மூலம் எளிய மக்களுடன் இணைக்கப் படுகிறோம் என்ற மந்திரத்தை உள்ளத்தில் கொள்வாயாக. இம்மந்திரம் உள்ளத்தில் இல்லையானால் அக்காரியத்தினால் சித்தசுத்தி ஏற்படாது.

185

கிருஷ்ண பகவான் யக்ஞமென்பதன் பொருளையே மாற்றிவிட்டார். அவர் பாலின் மகிமையைப் பெருக்கினார். மாடு மேய்க்கும் கிருஷ்ணனை அனைவரும் அறிவர். புலால் உணவை நிறுத்தியதனால் பசுப்பராமரிப்பு என்ற பெரிய

பயன் விளைந்தது. பசும்பாலின் சிறப்போங்கவும் புலாலுண்ணல் குறைந்தது.

186

ஒருவன் தனி மனிதனுக்குச் சிறப்பளிக்க, இன்னொருவர் சமூகத்திற்கு அளிக்கிறார். இதற்குக் காரணம் சமூகத்தில் ''வாழ்க்கைப்போர்'' என்ற கற்பனை தோன்றியிருப்பதே. இது காரணமாக சுயநலம் பரநலம் இரண்டாகப் பிரிக்கிறோம் இவ்வேற்றுமையைக் கற்பித்தவனை விசித்திரப்பிராணி என்றே சொல்ல வேண்டும். இல்லாத வேற்றுமை ஒன்றை உண்டாக்கி அதை ஏற்கும்படி போதித்து விட்டானே? இது சீனத்துச் சுவர் போன்றதே. இவை அனைத்திற்கும் காரணம் இன்று யக்ஞமயமான வாழ்க்கை அற்றுப் போனதே யாகும்.

187

கீதை வாழ்க்கையை யக்ஞமயமாக்கியபின், அது முழுவதையும் ஆண்டவனுக்கு அர்ப்பணம் செய்துவிட வேண்டும். ஆண்டவனுக்கு அர்ப்பணம் செய்து விடும் பொழுது சுயநலம், பரநலம் எல்லாம் ஒன்றாகிவிடும். இதுவே 'ஓம் தத்ஸத்' மந்திரத்தின் சாரம். நான் சாதகன்; அவன் பகவான்; இந்த சிருஷ்டி பூஜைப் போருள்—அவன் வழிபாட்டுக்குரியது. இந்த பாவனை நம் உள்ளத்தில் நிரம்பும் பொழுது 'ஓம்' என்பதைப் புரிந்தவர்களாவோம்.

188

'ஸத்' என்பது ஆண்டவன்; மங்களமானவன். சிருஷ்டி முழுமையும் சுபமானது.

189

'தத்' என்பதற்கு இச் சிருஷ்டியிலிருந்து வேறுபட்டது என்பது பொருள். சூரியன் உதித்ததும் காரியங்கள் நடக்கின்றன. ஆனால் அவனோ தொலைவிலேயே இருக்கிறான். அதுபோல் நம் காரியங்களிலும் பற்றின்மை கொள்வோ

மானல் நம் வாழ்க்கையில் 'தத்' கைவந்து விட்டது என்ருகும். இவ்வாறு கீதை 'ஓம் தத்ஸத்' என்று ஆண்டவனுக்கு அர்ப்பணம் செய்வதைப் போதிக்கிறது.

190

ஒருவர் என்னிடம், "ஒரு புறம் புண்ணிய மயமான கர்வமுள்ள வாழ்க்கை, மறுபுறம் பாவ மயமான பணிவான வாழ்க்கை, இவற்றுள் ஒன்றை மாத்திரம் தேர்ந்து கொள்" என்றநிலை ஏற்படுமானல், நான் வாய்திறந்து சொல்லக் கூசினலும் உள்ளத்தில் பாவத்தின் மூலம் எனக்கு ஆண்டவன் நினைவு ஏற்படுமாயின் அதுவே இருக்கட்டும் என்பேன். அவன் நினைவு வருவதற்குதவும் பாவ வாழ்க்கையே இருக்கட்டும் என்று என் மனம் சொல்லும் பாவமயமான வாழ்க்கையை ஆதரிப்பது இதன் பொருள் அல்ல. கொள்ளும் கர்வம் மிகவும் கொடிது, என்பதை வலியுறுத்தவே இது கூறப்படுகிறது.

191

புண்ணியவானுக்கு ஆண்டவனை நினைக்க உரிமை உண்டு. ஏனெனில் அவன் புண்ணியவான். பாவிக்கும் ஆண்டவனை நினைக்க உரிமை உண்டு; ஏனெனில் அவன் பாவி.

பதினெட்டாம் அத்தியாயம்

192

கர்மங்கள் சிறிதாயினும் பெரிதாயினும், சாத்துவிக மாயினும் அவை அனைத்திலும் ஏதேனும் குற்றங்குறைகள் உண்டு. விவசாயம் என்றசுதர்மத்தை எடுத்துக்கொள்ளுங்கள். இது ஒரு தூய சாத்து விகமான காரியம். யக்ஞமயமாய்ச் சுதர்மமாயுள்ள இவ் விவசாயத்தில் இம்சை இருக்கவே செய்கிறது. உழவு முதலியவற்றில் எவ்வளவோ உயிர்கள் சாகின்றன. நாம் துப்புரவு செய்வதும் கூட ஒரு கொலைச்

செயலாகவே முடிகிறது. சாத்துவிகமான சுதர்ம கர்மத்திலும் குற்றம் இருக்குமாயின், நாம் செய்ய வேண்டுவதென்ன? கர்மங்கள் அனைத்தையும் ஆண்டவனிடம் அர்ப்பணிப்பதே வழி.

193

கருமங்களைப்புரிவது நாமே என்று எண்ணுது, ''நான் ஒரு நிமித்தமே, கருமத்தின் செயல் - பொறுப்பு எனக்கில்லை'' என்று அதனை ஆண்டவனுக்கு அர்ப்பணித்து விடு. இதுவே நாம் செய்ய வேண்டுவது.''

''அர்ச்சுனு, சாதனை ஆகிய அனைத்தையும் துறந்து என்னைச் சரணடைக'' என்கிருர் பகவான்.

194

கீதையின் போதனை முழுவதிலும் கவனம் செலுத்துவோமாயின் கர்மத்தைத் துறத்தல் கூடாது என்ற போதனையே கிடைக்கிறது. கீதை கர்மத்தின் பயனைத் துறப்பதற்கு வகை செய்கிறது'; கர்மத்தை இடையருமல் செய்; ஆனுல் பயனைத் துறந்து வீடு'' என்றே கீதை போதிக்கிறது.

195

''பயனைத் துறந்து கர்மம் செய்'' என்று சொன்னதிலிருந்து எந்தக் கர்மங்களைச் செய்ய வேண்டும், எவற்றைச் செய்யக் கூடாது என்பதும் தெரிந்து விடும். அசத்தியமான காரியம், களவு கொலை போன்ற காரியம் இவற்றில் பயனைத் துறந்து செய்தல் என்பது சாத்தியமே அல்ல. பயனைத் துறத்தல் என்ற உரைகல்லில் உரைத்ததுமே இருகாரியங்கள் எல்லாம் பறந்துபோகின்றன.

196

கோவணமணிந்து கொண்டு செல்வச் சிறப்பைச் சேர்த்துக் கொள்ளுவதைவிட, சட்டை தலைப்பாகையுடன் இருத்தலே நல்லது. துறவில் கருவம் எழவிடக் கூடாது.

197

கர்மம், காரியம் என்ற இரண்டிற்கும் வித்தியாச முண்டு, உதாரணமாக ஓரிடத்தில் கூச்சலும் கூப்பாடுமாயிருக்கிறது. அதை நிறுத்தவேண்டும். போலீஸ்காரன் அமைதி, அமைதி என்று தொண்டை கிழியக் கத்தியும் கூச்சல் அடங்கவில்லை. வேறொருவர் அங்கே வந்து தன் விரலை மட்டும் காட்டிச் சைகை செய்ய கூச்சல் தணிகிறது. மூன்ருவது மனிதர் ஒருவர் அங்கே வந்தாலே போதும் எல்லாம் அமைதியாகி விடுகிறது. ஒருவன் தீவீரமான காரியம் செய்ய, இரண்டாமவர் அதை அடக்கமாகச் செய்ய, மூன்ருமவர் செய்ததோ வெகு சூட்சமம். சித்த சுத்தி வளர, வளரக் காரியத்தின் தீவிரம் குறைந்து கர்மத்தின் சூட்சமம் ஆழ மாகிறது. இதுவே கர்மத்தின் விளக்கம்.

198

உனக்கு இயற்கையாய் சுதர்மமாய் அமையாத கர்மங்களை, அவை உனக்குச் சுலபமாய்ச் செய்யக்கூடியவை என்று தோன்றினும் செய்ய வேண்டாம். ஓடியாடி அண்டத்தைப் புரட்டும் புதிய கருமங்களின் சுழலில் சிக்காதே. இயற்கையாய் அமைந்துள்ள காரியங்களின் பயனையே துறக்க இயலும். உனக்கு இயற்கையிலேயே அமைந்துள்ள சுதர்ம மான சாத்துவிகக் கர்மத்தையே செய்க.

199

சுதர்மத்தில் சுதேசிதர்மம் அடங்கும். உன்னிடத்தில் உனக்கே உரிய ஏதோ ஒரு சிறப்பு அம்சம் இருப்பதாலேயே நீ நீயாய் இருக்கிருய். ஒவ்வொரு மனிதனிடமும் அவனவனுக்குரிய சிறப்பு அம்சமிருக்கும். ஆடு ஆடாயிருந்து வருவதன் மூலமாகத்தான் வளரமுடியும். ஆடாயிருந்து கொண்டேதான் அது தன்னை வளர்த்துக் கொள்ள வேண்டும். ஆடு பசுவாக விரும்புதல் நடக்கக் கூடியதில்லை. அதனுல் தனக்கு இயற்கையில் அமைந்துள்ள ஆட்டுத் தன்மையைத் துறக்கலாகாது. இப்பிறவியில் அது ஆடாயிருத்தலே நல்லது.

200

''அர்ச்சுனு, நான் உனக்குச் சொன்ன அத்தனையும் கவனமாய்க் கேட்டாய். இப்பொழுது நன்கு சிந்தித்து உனக்குச் சரியென்று தோன்றுவதைச் செய்'' என்று கூறி பகவான் அர்ச்சுனனுக்குச் சுதந்திரம் அளித்துவிட்டார்

பகவானுக்கு மீண்டும் தயைவந்து விட்டது. சுதந்திரத்தின் பயனையும் துறந்து விடுமாறு கூறி,'' அர்ச்சுனு, நீ உன் விருப்பம், சாதனை ஆகிய அனைத்தையும் துறந்து என்னைச் சரணடைக என்ருர்.

''என் விருப்பமல்ல, எல்லாம் உன் விருப்பமே நிறை வேறட்டும் இச்சுதந்திரமும் எனக்கு வேண்டாம். நான் என்பதே இல்லை. எல்லாம் நீயே'' என்ற அனுபவம் நமக்கு ஏற்பட வேண்டும்.

201

ஆடு உயிர் வாழும்போது ''மே, மே, மே'' (நான், நான், நான்) என்கிறது. ஆனுல் அது இறந்த பிறகு அதன் நரம்பை நாணுகத் திரித்து வில்லில் பூட்டியபின், அது ''துஹீ, துஹீ, துஹீ'' (நீயே, நீயே, நீயே) என்கிறது. இப்பொழுது எல்லாம் நீயே, நீயே, நீயே!

விஜயா பிரிண்டர்ஸ், மதுரை - 1.